பக்கங்கள்:-31

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆனி 25 | திங்கட்கிழமை | 08.07.2024 | அதிர்வு 342

## 200 தொழிற்சங்கங்கள் இன்று போராட்டத்தில்!

நாடளாவிய ரீதியில் உள்ள 200 இற்கும் மேற்பட்ட அரச சேவைத் தொழிற்சங்கங்கள் இன்றும், நாளையும் சுகவீன விடுமுறையை அறிவித்து தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடத் 08



# பன்மைத்துவமும் சமத்துவமும் உறுதிப்படுத்தப்படுவதே தீர்வு!

## சம்பந்தன் கேட்டது அதையேதான் அஞ்சலி உரையில் மனோ விளக்கம்

(ந.லோகதயாளன்)

பன்மைத்துவமும் சமத்துவமும் உறுதிப்படுத்தப்படும் ஒரு தீர்வையே சம்பந்தன் கோரினார். ஆனால் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் துப்பாக்கியால் பெறமுடியாத விடயங்களைச் சம்பந்தன் பேச்சால் பெற முயற்சிக்கின்றார் என சிங்கள மக்களிடம் உரைத்தார்கள். அந்தப் போக்கு இன்னும் மாறவில்லை. அது மாறும் வரை நாட்டில் வாழும் தமிழ், முஸ்லிம், மலையக மக்கள் இரண்டாம், மூன்றாம் தரப் பிரஜைகளாகத்தான் வாழ வேண்டியிருக்கும். இதற்கு நாம் ஒருபோதும் தயாராக இல்லை என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார். 08

## மன்னார் மருதமடு சிறிய குருமட உதவி இயக்குனர் அருட்பணி ஜொனர்த்தன் விபத்தில் அகால மரணம்



(வாஸ் கூஞ்ஞ, எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் மறைமாவட்டத்தின் மருதமடு சிறிய குருமட உதவி இயக்குநர் அருட்பணி கீ.ஜொனார்த்தன் கூஞ்ஞ அடிகளார் (வயது 31) விபத்துக்கு உள்ளாகி அகால மரணமடைந்தார்.

இச்சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை 7 மணியளவில் தலைமன்னார் – மன்னார் பிரதான வீதியில், தலைமன்னார் பொலிஸ் பிரிவில், கட்டுக்காரன் குடியிருப்புப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இவ்விபத்து தொடர்பாக ஆரம்ப விசாரானையில் தெரியவருவதாவது:-

அருட்பணியாளர் ஜொனார்த்தன் கூஞ்ஞ நேற்று அவரின் சொந்தக் கிராமமாகிய தலைமன்னாரில் திவ்விய நற்கருணை விழாக் கொண்டாட்டத்தில் கலந்து கொண்டு கடல் மற்றும் மீனவர்களின் கடற்தொழில் உபகரணங்களை ஆசீர்வதித்த சடங்குகளில் பங்குபற்றினார். பின் தலைமன்னாரிலிருந்து 08




ஆட்சியாளர்களுக்கும் மக்களுக்கும் இன்று களேபர நாள்தான்.

சாவகச்சேரியில் இன்று காலை ஆரம்பமாகும் என எதிர்பார்க்கப்பட்ட போராட்டம் நேற்றிரவே தொடங்கி விட்டது. ஒரு வைத்திய அத்தியட்சகருக்கு ஆதரவாக மக்கள் கெம்பி வருவது மருத்துவர் சங்கத்துக்கு பீதியைக் கிளப்பிவிட்டது போலும். அதுவும் இன்று பணி புறக்கணிப்பு மிரட்டலை – தந்திரத்தை – கையில் எடுத்துள்ளது.

இனி என்ன...? நோயாளி வார்ட்டில... டாக்டர் ஐயா வீட்டிலே... என்ற நிலைதான்.

இதற்கிடையில் இரு நூறு அரச தொழிற்சங்கங்களின் அதிகாரிகளும் இன்று பணிப் புறக்கணிப்பில் ஈடுபடுகின்றனர்.

ஏற்கனவே கல்வி சாரா ஊழியர்களின் வேலைநிறுத்தம் காரணமாக பல்கலைக் கழகங்கள் இரண்டு மாதங்களுக்கு மேல் குழம்பிப் போய் நிற்கின்றன.

ஏற்கனவே போர்க்கொடி 08



# சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு முன்பாக நேற்று முன்னிரவே மக்கள் போராட்டம் ஆரம்பம்

## அத்தியட்சகரை பொலிஸ் கூட்டிச் செல்ல முயன்றமையை அடுத்து

(த.சுபேசன்)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் பதில் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் அர்ச்சுனாவிற்கு ஆதரவளித்து இன்று திங்கட்கிழமை பொதுமக்களின் போராட்டம் இடம்பெறவிருந்த நிலையில் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மற்றும் பொலிஸாரின் நடவடிக்கைகள் காரணமாக நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவு 8மணியளவிலேயே மேற்படி போராட்டம் ஆரம்பித்து விட்டது.

வைத்தியர் அர்ச்சுனாவிற்கான இடமாற்றக் கடிதத்தை நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவு வேளையில் வைத்து வழங்க முற்பட்டமை மற்றும் சற்று நேரம் கழித்து மாகாண சுகாதார பணிப்பாளர் விசாரணை என்ற பெயரில் அவரைப் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்ல பெரும் எண்ணிக்கையான பொலிஸாருடன் வந்து முற்பட்டமை ஆகியவை காரணமாக ஆஸ்பத்திரியில் பெரும் களேபர நிலை ஏற்பட்டது. சுமார் 400பொதுமக்கள் ஒன்றுகூடி வைத்தியசாலை முன்றிலில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் பொலிஸார் குவிக்கப்பட்டு அவ்விடத்தில் பதற்ற நிலை ஏற்பட்டிருந்தது.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் அர்சுனா மீது மாகாண சுகா

தொடர்ச்சி▼











# சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு முன்பாக நேற்று முன்னிரவே மக்கள் போராட்டம் ஆரம்பம்

## அத்தியட்சகரை பொலிஸ் கூட்டிச் செல்ல முயன்றமையை அடுத்து

தொடர்ச்சி▲

தார சேவைகள் பணிப்பாளர் சமன் பத்திரன மேற்கொண்ட பொலிஸ் முறைப்பாட்டின் அடிப்படையில் வைத்திய அத்தியட்சகரை விசாரணைக்கு அழைத்துச் செல்ல பொலிஸார் குவிந்தமையாலேயே பரபரப்பு ஏற்பட்டது.

மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளருடன் வைத்திய அத்தியட்சகர் கண்டிப்பாக நடந்து கொண்டார் என மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையிலேயே பொலிஸாரால் இரவு வைத்திய அத்தியட்சகர் அர்ச்சுனாவை விசாரணைக்கு வருமாறு வற்புறுத்தினர்.


இருப்பினும் வைத்தியசாலையில் வைத்தியர்கள் இல்லை எனக் கூறி அத்தியட்சகர் விசாரணைக்கு செல்ல மறுத்தபோதிலும், மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பதில் வைத்தியர் ஒருவரை அழைத்து வந்தமையால் பொது மக்கள் குழப்பமடைந்தனர்.

ஐந்து நாள்களாக வராத வைத்தியர்கள் தற்போது வைத்திய அத்தியட்சகரை பொலிஸ் விசாரணைக்கு உட்படுத்தும் முகமாக வருகை தந்திருக்கிறார் எனக் கூறி வருகை தந்த வைத்தியருடனும் பொது மக்க முரண்பட்டனர்.

இந்நிலையில் இரவு உணவருந்த வைத்தியசாலைக்கு வெளிய செல்ல முற்பட்ட வைத்தியரை மறித்த பொதுமக்கள், அவரை வைத்தியசாலையை விட்டு வெளியேறக்கூடாது, தாமே உணவைக் கொண்டு வந்து தருகிறோம் எனக்கூறி வைத்தியரை வைத்தியசாலைக்கு உள்ளேயே இருக்குமாறு வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

இரவிரவாக அங்கு பதற்ற நிலை நள்ளிரவு தாண்டியும் நீடித்தது.

(முன்னர் வந்த செய்தி 24 ஆம் பக்கத்தில்)





# அனைத்து வைத்தியர்களும் இன்று பணிப்புறக்கணிப்பு!

வட மாகாணத்தில் உள்ள அனைத்து அரச வைத்திய சாலை வைத்தியர்களும் இன்று ஒரு நாள் பணிப் புறக் கணிப்பில் குதிக்கின்றனர்.

வட மாகாணத்தின் யாழ் மாவட்டத்தில் உள்ள சாவச்சேரி ஆதார வைத்திய சாலையில் புதிதாக தற்காலிகமாக நியமிக்கப்பட்ட வைத்திய அத்திட்சகாரினால் அங்கு கடமை யாற்றும் வைத்தியர்களின் பாதுகாப்பிற்கு ஏற்படுத்தப் பட்ட அச்சுறுத்தலுக்கு எதிராகவும், தாபன விதி கோவைகளுக்கு எதிரான அவருடைய நடைமுறைகளுக்கு எதிராகவும், அவரின் அப்பட்டமான விதிமுறை மீறல்களுக்கு எதிராகவும் உடனடி நடவடிக்கை எடுக்க தவறியமைக்காகவும், பாதிக்கப்பட்டுள்ள வைத்தியசாலை வைத்தியர்களுக்கு சார்பாகவும வட மாகாணத்தில் உள்ள அனைத்து அரச வைத்தியசாலை வைத்தியர்களும் ஒரு நாள் பணிப் புறக் கணிப்பை மேற்கொள்ள உள்ளனர் என அறிவிக்கப்பட்டது.

இதன் பிரகாரம் இன்று திங்கட்கிழமை காலை 8 மணியிலிருந்து மறுநாள் காலை 8:00 மணி வரை வைத்தியர்கள் உயிர் காக்கும் அவசர சிகிச்சைகளில் மாத்திரமே ஈடுபடுவர் என அரசவைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.





# பிரிக்கப்படாத இலங்கைக்குள் தீர்வுகாண்பதற்கு சம்பந்தனும் நானும் எப்போதும் பணியாற்றினோம்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

மறைந்த ஆர்.சம்பந்தன் தமிழ் மக்களின் உரிமைகளுக்காக மாத்திரமன்றி ஒட்டுமொத்த இலங்கை மக்களின் உரிமைகளுக்காகவும் முன் நின்ற தலைவர். சம்பந்தனும் நானும் எப்போதும் பிரிக்கப்படாத இலங்கைக்காக தம்மை அர்ப்பணித்தவர்கள். ஆர். சம்பந்தனுடன் உடன்பாட்டுடன் முன்நோக்கி கொண்டு வந்த அந்தக் கலந்துரையாடல்களை வெற்றிகரமாக நிறைவு செய்ய அனைவரும் ஒன்றிணைய வேண்டும்.

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

திருகோணமலையில் அன்னாரது இல்லத்தில் நேற்று பிற்பகல் நடைபெற்ற சம்பந்தனின் இறுதி கிரியையில் கலந்து கொண்ட போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மறைந்த ஆர். இரா.சம்பந்தனின் இறுதிக் கிரியைகள், நேற்று பிற்பகல் ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சி அரசியல் தலைவர்கள், அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், கட்சித் தலைவர்கள் உட்பட பெருந்திரளான மக்களின் பங்கேற்புடன் இடம்பெற்றது.

இதன்போது ஜனாதிபதி மேலும் தெரிவிக்கையில் –

“ஆர்.சம்பந்தனின் மறைவால் நீண்டகால நண்பரை இழந்துவிட்டேன். 50 ஆண்டுகளுக்கு முன்பு நான் புதிய சட்டத்தரணியாக செயற்பட்டபோதே ஒரு சட்டத்தரணியாக நான் அவரை சந்தித்தேன். 1977 ஆம் ஆண்டு நானும் சம்பந்தனும் புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களாக நாடாளுமன்றத்திற்கு வந்தோம்.

அந்த நாடாளுமன்றத் தேர்தலில் திருகோணமலையில் எமது கட்சியின் செயற்குழு உறுப்பினர் நவரத்தினராஜாவை நான் ஆதரித்தேன். ஆனால் அந்தப் போட்டியில் ஆர். சம்பந்தன் வெற்றி பெற்றார்.

குறிப்பாக தனிநாடு உருவாக்கப்பட வேண்டும் என்ற பிரேரணையின்படி நாடாளுமன்றம் இரு தரப்பாக பிரிந்தது. ஆர். சம்பந்தன் ஆளுங்கட்சி உறுப்பினர்களுடன் சிறப்பான உறவைக் கொண்டிருந்தார்.

இந்த நாட்டைப் பிரிக்க முடியாது என்பதால், சமஷ்டி ஆட்சி முறையில் அல்லது மாவட்ட சபை முறையை விட அதிக அதிகாரங்களை வழங்குவது குறித்து தொடர்ந்து கலந்துரையாடி வந்தோம்.

எங்களுக்குள் பிரச்சினை ஏற்பட்டது. திருகோணமலையில் ஒரு காணியை நான் இளைஞர் சேவை மன்றத்திற்கு வழங்கிய போது நாடாளுமன்றத்தில் கூட எமக்கிடையில் விவாதங்கள் இடம்பெற்றன. இதைக் கட்டுப்படுத்த அவர் எடுத்த முயற்சியும், நாங்கள் எடுத்த முயற்சியும் வெற்றி பெறவில்லை.

அவர் 1983 இல் இலங்கையை விட்டு வெளியேறினார். மறுபடியும் அவர் நாடாளுமன்றத்துக்கு வந்த பிறகு, நாங்கள் மீண்டும் தொடர்புகளைப் பேணினோம். 2009 இல் யுத்தம் முடிவுக்கு வந்த பிறகு, தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக மீண்டும் அவருடன் இணைந்து செயல்படும் வாய்ப்புக் கிடைத்தது.

அவர் ஒருபோதும் தனி நாடு கோரவில்லை. அனைவரும் ஒன்றாக இருக்க வேண்டும் என்று எப்போதும் கூறினார். தமிழ் மக்கள் துன்பப்படுவதாகவும் அவர்களின் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு காணப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

நாங்கள் தேர்தலில் இணைந்து பணியாற்றியுள்ளமையுடன், பொது வேட்பாளர்களை ஆதரித்துள்ளோம். குறிப்பாக மைத்திரிபால சிறிசேனவுக்காக நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட்டோம். அதற்கு முன் சரத் பொன்சேகாவுக்காக செயற்பட்டோம்.

கடந்த கால நிகழ்வுகள் மற்றும் அரசியல் குறித்து அவரிடம் எப்போதும் நான் கதைப்பேன். 1948 இல் இந்த நாடு சுதந்திரம் பெறும் வாய்ப்பைப் பார்த்த ஒரே எம்.பி. அவர்.

தொடர்ச்சி▼












# பிரிக்கப்படாத இலங்கைக்குள் தீர்வுகாண்பதற்கு சம்பந்தனும் நானும் எப்போதும் பணியாற்றினோம்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

தொடர்ச்சி▲

மேலும் அரசியல் பற்றியும் நாம் கதைப்போம்.

அதன் பிறகு அவர் எதிர்க்கட்சித் தலைவராகப் பணியாற்றினார். அதன்போது தனது சிறப்பான குணத்தை எடுத்துக் காட்டினார். தமிழ் மக்களின் பிரச்சினைகளைப் பற்றிப் பேசியதோடு, அதற்காக பாடுபட்டார். அது மாத்திரமன்றி அனைத்து இலங்கையர்களின் பிரச்சினைகளையும் எதிர்க்கட்சித் தலைவர் என்ற வகையில் முன்வைத்தார். அப்போது அவர் உண்மையான எதிர்க்கட்சித் தலைவராகச் செயல்பட்டார். உண்மையான எதிர்க்கட்சித் தலைவர் என்பவர் மாற்றுப் பிரதமர் ஆவார்.

2018 ஆம் ஆண்டு அரசாங்கத்தில் ஏற்பட்ட நெருக்கடி நேரம், நான் பிரதமர் பதவியை இழந்தபோது எதிர்க்கட்சித் தலைவராக அவர் சிறந்த தலைமைத்துவத்தை வெளிப்படுத்தினார். வேறு காரணங்களால், எங்களது கலந்துரையாடல் வெற்றியடையவில்லை, குறிப்பாக உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்பின் பின்னர், அரசியல் தீர்வுகளை முன்வைப்பதற்கான பின்னணி எம்மிடம் இருக்கவில்லை.

நான் ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர், இந்த விடயங்களை அவருடன் கலந்துரையாடினேன். மேலும் தமிழ் கட்சிகள் மற்றும் எம்.பி.க்களுடன் கலந்துரையாடப்பட்டது. மிக முக்கியமான சில கருத்துகள் அங்கு பேசப்பட்டன. பிரிக்கப்படாத இலங்கையில் இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண நாங்கள் இருவரும் ஒப்புக்கொண்டோம். இப் பேச்சுவார்த்தைகள் நடந்து கொண்டிருக்கும் வேளையில், நாட்டை வங்குரோத்து நிலையில் இருந்து மீட்பதற்கு நான் முன்னுரிமை வழங்க வேண்டியிருந்தது. இதனால், கடந்த சில மாதங்களாக எங்களது கலந்துரையாடல்களை முன்னெடுக்க முடியவில்லை.

இந்த கலந்துரையாடல்களை இந்த நாடாளுமன்ற வாரத்தில் மீண்டும் தொடங்க முடியுமா என்று நான் விசாரித்தேன். ஆனால் அந்த வாய்ப்பிற்கு முன்னரே சம்பந்தன் நம்மை விட்டு பிரிந்துவிட்டார். ஆனால் இந்த கலந்துரையாடல்களை நாம் தொடர்ந்து முன்னோக்கிக் கொண்டு சென்று நிறைவு செய்ய வேண்டும். தேசிய காணி ஆணைக்குழுவின் வரைவு தற்போது நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க தயாராகியுள்ளது.

சிங்கள, தமிழ், மற்றும் முஸ்லிம்கள் தமது கிராமங்களை சுவீகரிப்பது தொடர்பில் வனவளத் திணைக்களத்துடன் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். அந்தப் பிரச்சினைகளை சட்டத்தின் மூலம் தீர்க்க இந்த ஆணைக்குழுவுக்கு அதிகாரம் அளிக்க எதிர்பார்க்கப்படுகின்றது.

மாகாண சபைத் தேர்தலை நடத்துவது அவசியம் என அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் தற்போது ஜனாதிபதி தேர்தலை முதலில் நடத்துவது என கலந்துரையாடி தீர்மானித்துள்ளோம். யார் நீதிமன்றத்திற்கு சென்றாலும் இந்த வருடமே ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படும். அடுத்து நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்பட்டு அதன் பின்னர் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும்.

புதிய முறைமையில் ஏற்பட்டுள்ள சிக்கல் நிலை காரணமாக மாகாண சபைத் தேர்தலை பழைய முறைமையிலேயே நடத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது. அதற்காக எங்களுக்குள் உடன்பாடு ஏற்பட்டிருந்தது. பெண்கள் மற்றும் இளைஞர்களின் பிரதிநிதித்துவத்தை வழங்குவதுடன், நாடாளுமன்ற உறுப்பினர்களின் அங்கத்துவத்தை வைத்துக்கொண்டு இதற்காக போட்டியிட அனுமதிப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் பொலிஸ் அதிகாரம் இல்லாமல் மத்திய அரசிடம் இருந்து வேறு பல அதிகாரங்களை பெற்றுக்கொள்ள இப்போது நாடாளுமன்றத்தில் இருக்கும் பிரதான உறுப்பினர்களுடன் கலந்துரையாடி வருகின்றோம். ஏனைய அதிகாரங்கள் பற்றி பின்னர் கலந்துரையாடலாம்.

புதிய பரிந்துரையாக, அதிகாரப் பகிர்வில் 13 ஆவது திருத்தத்தின் கட்டமைப்பிற்குள் அதிகபட்ச அதிகாரத்தை பரவலாக்குவதற்கு அரசாங்கம் முன்மொழிந்துள்ளது. மேலும், நவாஸ் ஆணைக்குழு அறிக்கை குறித்தும் கலந்துரையாடப்பட உள்ளது. ஒற்றுமை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு சட்ட மூலத்தை முன்வைக்கத் தயார் செய்யப்பட்டுள்ளதாக வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் என்னிடம் தெரிவித்தார். அதுமட்டுமல்லாமல், மக்கள் சபை முறை குறித்தும் இப்போது கலந்துரையாடி உடன்பாடு எட்டியுள்ளோம். இந்த கலந்துரையாடல்களை முன்னோக்கி கொண்டு சென்று நிறைவு செய்ய நாம் எதிர்பார்க்கின்றோம்.

சம்பந்தன் தமிழ் மக்களின் உரிமைக்காக பாடுபட்ட தலைவர். சம்பந்தன் இலங்கை மக்களின் உரிமைகளுக்காக குரல் கொடுத்த தலைவர். நாம் இருவரும், பிரிக்கப்படாத இலங்கைக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டவர்கள். அதற்காக நாங்கள் இருவரும் உடன்பாட்டுடன் கலந்துரையாடல்களை முன்னோக்கி கொண்டு சென்றதுடன் இப்பணியை நிறைவு செய்ய அனைவரும் ஆதரவு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.” – என்றார்.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், தமிழகத்தின் பாரதிய ஜனதா கட்சியின் தலைவர் கே. அண்ணாமலை உட்பட பல வெளிநாட்டு தூதரகப் பிரதிநிதிகளும் இறுதி கிரியையில் கலந்து கொண்டனர்.

அத்துடன், நாடாளுமன்ற உறுப்பினர்களான மனோ கணேசன், லக்ஷ்மன் கிரியெல்ல, ரவூப் ஹக்கீம், ரிஷாத் பதுர்தீன், எம்.ஏ. சுமந்திரன், தர்மலிங்கம் சித்தார்த்தன், மாவை சேனாதிராஜா, எஸ். இராசமாணிக்கம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி நளின் டி ஜயதிஸ்ஸ மற்றும் அரசியல் கட்சித் தலைவர்கள், பிரதிநிதிகள் மற்றும் பிரதேசத்தைச் சேர்ந்த பெருந்தொகையான மக்கள் கலந்து கொண்டனர்.




# சம்பந்தனின் நோக்கம் நிறைவேறுவதற்கு பிரதமர் மோடி ஒத்துழைப்பு வழங்குவார்!

## அஞ்சலி உரையில் கே.அண்ணாமலை தெரிவிப்பு




"சம்பந்தன் முக்கிய நோக்கத்துக்காக வாழ்ந்து மறைந்திருக்கிறார். அந்த நோக்கம் முழுமையாக நிறைவேறவில்லை. அந்த நோக்கம் நிறைவேறுவதற்காக பாரதிய ஜனதா கட்சியினரும், பிரதமர் மோடியும் முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்குவார்கள்."

– இவ்வாறு பாரதிய ஜனதா கட்சியின் தமிழகத் தலைவர் கே. அண்ணாமலை தெரிவித்தார்.

திருகோணமலையில் நேற்று நடைபெற்ற மறைந்த இரா. சம்பந்தனின் இறுதி அஞ்சலி நிகழ்வில் அஞ்சலி உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் –

"91 ஆண்டுகள் இனமொன்றின் விடுதலைக்கான இயக்கத்தில் பணியாற்றிய தலைவர் ஒருவர் மறைந்த துக்கமான தருணத்தில் இணைந்திருக்கின்றோம். அரசியல் தலைவர்களுக்கு எல்லாம் இலக்கணமாக இருந்ததோடு அரசியல் கொள்கையில் நெஞ்சுரத்துடன் நேர்மையாக இருந்துள்ளார்.

அவரொரு சட்டத்தரணியாக இருந்தபோதிலும் 1956 இல் தமிழரசுக் கட்சியில் இணைந்து கொள்கை ரீதியான அரசியலை முன்னெடுத்தார். சம்பந்தன் தாம் எடுத்த பணியை இயன்ற அளவில் முன்னெடுத்து, இங்கிருக்கின்ற அனைத்துத் தலைவர்களும் அடுத்தகட்ட பிரதிநிதிகளுக்கும் தனது பணியை தொடர்ந்து முன்னெடுத்து நிறைவுக்கு கொண்டு வரவேண்டும் என்று விட்டுச் சென்றுள்ளார்.

பாரத பிரதமர் நரேந்திர மோடி கொழும்பில் சம்பந்தனை ஐந்து ஆண்டுகளுக்கு முன்னதாக சந்தித்தபோது எடுத்த புகைப்படத்தினை அவர் மீண்டும் பகிர்ந்து நினைவுகளை வெளிப்படுத்தியுள்ளார்.

விசேடமாக தமிழர்களுக்கு நேர்மையானதொரு தீர்வு கிடைக்க வேண்டும் என்பதை நினைவுகூர்ந்துள்ள பிரதமர் மோடி உணர்வுடன் வெளிப்படுத்தியுள்ளார்.

நான் இங்கு நின்றுகொண்டிருப்பதற்கான காரணம், தமிழக மக்களும் பாரதிய ஜனதா கட்சியும் எந்தளவு தூரம் மதிப்பும் மரியாதையும் வைத்திருக்கின்றோம் என்பதன் வெளிப்பாடாகும்.

அதேநேரம், சம்பந்தன் முக்கிய நோக்கத்துக்காக வாழ்ந்து மறைந்திருக்கின்றார். அந்த நோக்கம் முழுமையாக நிறைவேறவில்லை. அந்த நோக்கம் நிறைவேறுவதற்காக பாரதிய ஜனதா கட்சியினரும், பிரதமர் மோடியும் முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்குவார்கள்.

அத்துடன் சம்பந்தன் விட்டுச்சென்ற பணியை முன்னெடுப்பதற்காக அனைத்து தலைவர்களும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்று நான் கேட்டுகொள்கின்றேன்."– என்றார்.



# அரசமைப்பில் வழங்கப்பட்ட உரிமைகளை தம் மக்கள் பெறப் போராடியவர் சம்பந்தன்

## இறுதி அஞ்சலி நிகழ்வில் சஜித்தின் செய்தியில் தெரிவிப்பு



தனது வாழ்நாள் முழுவதும், தாம் பிரதிநிதித்துவப்படுத்திய மக்களுக்கு அரசமைப்பின் ஊடாக உத்தரவாதம் அளிக்கப்பட்ட அனைத்து உரிமைகளையும் சலுகைகளையும் பெற உறுதியுடனும் அர்ப்பணிப்புடனும் பணியாற்றியவர் சம்பந்தன்.

சம்பந்தனின் இறுதி நிகழ்வை ஒட்டி நடைபெற்ற இறுதி அஞ்சலி நிகழ்வில் வாசிக்கப்பட்ட எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் ஐக்மகிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவின் செய்தியில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

“இலங்கை அரசியலில் முன்மாதிரியான ஆளுமை சம்பந்தன்“ என்ற தலைப்பிலான அந்தச் செய்தியை அவரின் சார்பில் இறுதி நிகழ்வில் பங்குபற்றிய லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி. வாசித்தார். அந்தச் செய்தியில் கூறப்பட்டிருந்தவை வருமாறு:-

இலங்கை அரசியலில் மற்றுமொரு முன்மாதிரியான ஆளுமையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றத்தின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருமான இராஜவரோதயம் சம்பந்தனின் மறைவு குறித்து மிகவும் மனவேதனையடைந்தேன்.

சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் போன்றவற்றைத் தனது அரசியலில் எடுத்துரைத்து செயற்பட்ட அன்னார் இலங்கையின் அடையாளத்திற்குள் அனைத்து மக்களின் கண்ணியமும் உரிமைகளும் சமம் என உறுதியாக நம்பிய ஒரு தலைவர்.

சம்பந்தன் எப்போதும் நேர்மையையும் மனசாட்சியையும் மனதில் கொண்டு செயல்பட்டவர். அன்னார் தனது வாழ்நாள் முழுவதும், பிரதிநிதித்துவப்படுத்திய மக்களுக்கு அரசமைப்பின் ஊடாக உத்தரவாதம் அளிக்கப்பட்ட அனைத்து உரிமைகளையும் சலுகைகளையும் பெற உறுதியுடனும் அர்ப்பணிப்புடனும் பணியாற்றியவர். தனது மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதில் ஜனநாயகத்தின் மீது அதீத நம்பிக்கை கொண்டிருந்த அன்னார் மக்களின் இறைமைக்கு சவால் விடும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், தனிப்பட்ட முறையில் தன்னை அது எவ்வாறு பாதிக்கும் என்றுகூடக் கருதாமல் அதற்கு எதிராக குரல் கொடுத்தவர்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது அன்னார் எனக்கு வழங்கிய ஆதரவை இந்தத் தருணத்தில் நன்றியுடன் நினைவு கூருகின்றேன்.

அந்த நேரத்திலும், சமீபத்தில் அன்னாரின் உடல் நலம் குறித்து விசாரிக்க சென்ற போதும், வழங்கிய அறிவுரைகள் மற்றும் வழிகாட்டுதல்களில் இலங்கையின் தேசிய ஒருமைப்பாடு எவ்வாறு கொண்டுவரப்பட வேண்டும், அதற்கு என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பது குறித்த விழிப்புணர்வு, எனது அரசியலின் எதிர்கால கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை வகுக்க உந்துசக்தியாக அமைந்தது என்பதையும், ஓர் ஆளுமையின் உன்னத மனித குணங்கள் அதன் மூலம் வெளிப்பட்டமையையும் இத் தருணத்தில் மிக்க மரியாதையுடன் குறிப்பிட விரும்புகின்றேன்.

அன்னாருடைய வழிகாட்டுதலும், செயற்பாடும் நாட்டிற்குத் தேவைப்படும் இத் தருணத்தில் நம்மை விட்டுப் பிரிந்து செல்கிறார்.

அன்னாருடைய ஜனநாயக மற்றும் மனிதாபிமான பார்வையை நன்கு அடையாளம் கண்டு அதற்கேற்ப செயல்படுவதே அன்னாருக்கு நாம் செலுத்தும் உண்மையான மரியாதையாகும்.

நியாயமாகவும், நிதானமாகவும் முடிவெடுக்கும் தலைமைப் பண்பைப் பெற்ற அன்னாரது சிந்தனையின் பிரகாரம், நம் நாட்டுக்காக அர்ப்பணிப்புச் செய்தல் மற்றும் அதன்படி செயற்படுதலாகும்.

சம்பந்தன் அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரது அன்புக் குடும்பத்தினர் அனைவருக்கும், அன்னாருடன் நான்கு தசாப்தங்களுக்கு மேலாக அரசியலில் பணியாற்றிய அனைவருக்கும் நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராகவும், ஐக்கிய மக்கள் சக்தியின் மற்றும் ஐக்கிய மக்கள் கூட்டமைப்பின் தலைவராகவும் எனது இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நீங்கள் எங்களுக்குக் கற்றுக் கொடுத்த பல விடயங்களில் மனித நேயத்தைப் பார்த்தோம். அந்த மனித நேயத்தின் விளைவாக சம்பந்தன் அவர்களின் ஆத்மா சாந்தியடையும் என்பதில் எந்தவித ஐயமுமில்லை.

– என்று தெரிவிக்கப்பட்டது.

# இலங்கை கிரிக்கெட் அணியின் இடைக்கால பயிற்றுவிப்பாளராக சனத் ஜயசூரிய நியமனம்



இலங்கைக் கிரிக்கெட் அணியின் இடைக்காலப் பயிற்றுவிப்பாளராக சனத் ஜயசூரிய நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தியா மற்றும் இங்கிலாந்து அணிகளுடனான கிரிக்கெட் தொடர்களுக்காக பயிற்றுவிப்பாளராக சனத் ஜயசூரிய நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை அணியின் தலைமைப் பயிற்றுவிப்பாளராக இருந்த கிறிஸ் சில்வர்வூட் அண்மையில் இராஜினாமாச் செய்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கு சனத் ஜெயசூரிய தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன், அவர் இலங்கை கிரிக்கெட் அணியின் ஆலோசகராகப் பணியாற்றுகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தூக்கி இருக்கும் அதிபர், ஆசிரியர்களும் எந்நேரமும் மீண்டும் வேலை நிறுத்தக் களத்துக்குத் திரும்பும் ஏதுநிலைகள் தென்படுகின்றன.

ஏற்கனவே வேலை நிறுத்த எச்சரிக்கையை வெளியிட்டிருக்கும் கிராம சேவையாளர் சங்கம், 'திடீர் வேலை நிறுத்தங்கள்' புகழ் ரயில்வே சாரதிகள், காட்மர் உட்பட்டவர்களின் ரயில்வேத் தொழிற்சங்கங்கள் மற்றும் தாதியர் தொழிற்சங்கம் போன்றவை தங்கள் ஆவர்த்தனங்களை எந்நேரமும் வாசிக்கத் தொடங்கலாம்.

இந்தப் பணிப் புறக்கணிப்பு – வேலை நிறுத்தம் – போன்ற போராட்டங்கள் பல வற்றினதும் பிரதான பின்புலமாக இருப்பது சம்பள உயர்வு பற்றிய கோரிக்கைகள்தான்.

ஆனால் இது விடயத்தில் தமது அரசின் நிலைப்பாடு யாது என்பதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திட்டவட்டமாக தெரிவித்து விட்டார்.

இந்த ஆண்டில் இனி எந்தத் தரப்பினருக்கும் சம்பள உயர்வு கிடையாது. அது குறித்து இனிமேல் அடுத்த ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் சிந்திக்கலாமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெளிவாகவும் உறுதியாகவும் கூறிவிட்டார்.

ஆனால் அதைக் கேட்டு தொழிற்சங்கங்கள் அடங்கப் போவதில்லை.

நானா, நீயா என்ற சண்டித்தனத்துடன் வேலை நிறுத்தப் போராட்டக் களத்தில் அவை களம் இறங்கும்.

நாடுதான் பாவம். வங்குரோத்து நிலையில் இருந்து எப்படி நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தப் போகின்றனரோ தெரியவில்லை. சாண் ஏற முழம் சறுக்குகிறது என்ற நிலைமைதான்.

ஜனாதிபதி தேர்தலுக்கான அறிவிப்பை வெளியிடாமல் தடுக்கக் கோரி உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுவும் இன்று ஐந்து நீதியரசர் கொண்ட ஆயத்தின் முன்னால் வருகிறது.

இந்த மனுவையும் விசாரணையையும் மக்களும் எதிரணி அரசியல் கட்சியினரும் சந்தேகத்துடன்தான் நோக்குகின்றனர்.

நீதிமன்ற உத்தரவுகளும் கூட 'அறகலைய' போன்ற களேபரங்களுக்கு வழிவகுத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை....!

## 200 தொழிற்சங்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தீர்மானித்துள்ளன.

அதேநேரம், எதிர்வரும் 9 ஆம் திகதி நாடளாவிய ரீதியில் சுகவீன விடுமுறையை அறிவித்து தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு ஆசிரியர், அதிபர் சங்கங்களின் கூட்டமைப்பு தீர்மானித்துள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், நேற்று நள்ளிரவு முதல் நாடளாவிய ரீதியில் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுத்துள்ளதாக ஒன்றிணைந்த அஞ்சல் தொழிற்சங்க முன்னணியின் ஒருங்கிணைப்பாளர் சிந்தக பண்டார தெரிவித்துள்ளார்.

## மன்னார் மருதமடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மன்னாருக்கு குருமடத்துக்கு திரும்பிச் சென்றபொழுதே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கட்டாக்காலி ஒன்று வீதிக்குக் குறுக்கே பாய்ந்தபோதே இந்த அனர்த்தம் ஏற்பட்டிருக்கலாம் என ஆரம்ப விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இவர் விபத்து நடந்த இடத்திலேயே உயிரிழந்துள்ளார். இவர் வீதியில் கிடக்கக் கண்டவர்களே இவரை தலைமன்னார் வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர்.

இவரின் சடலம் தலைமன்னார் பிரதேச வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு பின் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக மன்னார் பொது வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இவ் விபத்து தொடர்பாக தலைமன்னார் பொலிஸார் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

அகால மரணமடைந்த அருட்தந்தை அருட்பணி கீ.ஜொனார்த்தன் கூஞ்ஞ அவர்கள் மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையினால் 16.06.2022 ஆம் ஆண்டு குருவாக திருநிலைப்படுத்தப்பட்டிருந்தார்.

இவர் மருதமடு அன்னையின் திருத்தளத்தில் பரிபாலகருக்கு உதவியாளராசவும் பின் மன்னார் மறைமாவட்டத்தின் மருதமடு சிறிய குருமடத்தின் உதவி இயக்குனராகவும் தனது குருத்துவ வாழ்வில் கடமைபுரிந்து வந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## பன்மைத்துவமும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேற்று இரா.சம்பந்தனின் இறுதி நிகழ்வில் பங்குகொண்டு அஞ்சலி உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில் கூறியவை வருமாறு:-

நல்லாட்சிக் காலத்தில் கடைசி முயற்சியாக வழிகாட்டல் குழுவில் இருந்து இந்த நாட்டிற்கு புதியதொரு அரசமைப்பைக் கொண்டு வந்து பிரிபடாத- ஒரே இலங்கைக்குள் – சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் – பௌத்த, இந்து, இஸ்லாம், கிறிஸ்தவ மக்கள் – ஒரே குடும்பத்தின் அங்கத்தவர்களாக வாழக்கூடியதான நிலைமையை ஏற்படுத்த அவர் அயராது உழைத்தார். இதற்கு சாட்சியாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்காவும் உள்ளார். அன்று பிரதமராக இதே வழிகாட்டல் குழுவின் தலைவராக அவர் இருந்தார். இங்கே நண்பர்கள் சுமந்திரன், ரவூப் ஹக்கீம், நிசாட் பதியுதீனும் கூட சாட்சிகளாக இருந்தார்கள்.

சம்பந்தன் வேறு என்ன கேட்டார்? பிரிபடாத ஒரே இலங்கைக்குள்ளே பன்மைத்துவம் உறுதி செய்யப்பட வேண்டும், சமத்துவம் உறுதி செய்யப்பட வேண்டும் என்றார். வேறு ஒன்றும் கேட்கவில்லை.

பௌத்தத்திற்கு முன்னுரிமை என்ற விடயத்தையும் அவர் தொட்டும் பார்க்கவில்லை. இதற்கு

நண்பர்கள் சுமந்திரன், ரவூப்ஹக்கீம், நிசாட் பதியுதீனும் சாட்சியம் பகர்வார்கள்.

இங்கே பாரதீய ஜனதாக் கட்சியின் தமிழ்நாடு தலைவர் அண்ணாமலையின் பேச்சை கேட்க மகிழ்ச்சியாக இருந்தது.

பிரிபடாத ஒரே இலங்கைக்குள் வாழ விரும்புகின்றோம் நாங்கள். அதற்காக சம்பந்தன் உழைத்தார். இதற்காக தமிழ் மக்களிடம் இருந்தும் கடுமையாக விமர்சனங்களை அவர் எதிர்கொள்ள வேண்டி இருந்தது.

சிங்கள அப்பாவி மக்கள் மத்தியிலே சென்றஅரசியல்வாதகள், இவர்தொடர்பில் தப்பாக எடுத்துக்கூறி நாட்டைப் பிரிக்கப் பார்க்கின்றார், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் துப்பாக்கியால் பெறமுடியாத விடயங்களை எல்லாம் பேச்சால் பெற முயற்சிக்கின்றார் எனப் பொய் உரைத்தார்கள். அந்த யதார்த்தப் போக்கு இன்னும் மாறவில்லை. மாறும் வரை நாட்டில் வாழும் தமிழ், முஸ்லிம், மலையக மக்கள் இரண்டாம், மூன்றாம் தர பிரஜைகளாகத்தான் வாழ வேண்டியிருக்கும்.

அதற்கு நாம் ஒருபோதும் தயாராக இல்லை. அதை நான் அறுதியிட்டுக் கூறுகின்றேன்.

இதை நான் சொல்லாமல் இருந்தால் மனச் சாட்சிக்கு விரோதமாக செயலபட்டவனாக இருப்பேன். ஆகவே இந்த முறைமை மாற்றப்பட வேண்டும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த வாரம் நாடாளுமன்றில் பேசும்போதும் சம்பந்தனுக்கும் தனக்கும் உள்ள உறவை விவரித்தார். எதிர் காலத்திலே விரைவிலே மாற்றம நிகழ வேண்டும் அதிலே எல்லா மக்களும் சமத்துவம், பன்மைத்துவம் அடிப்படையில் இந்த நாடு ஓர் இனத்திற்கும், ஒரு மதத்திற்கும் சொந்தமல்ல. பல மொழி, பல மதம் கொண்ட நாடாக மாற வேண்டும். அதற்காவே நாம் உழைக்கின்றோம். – என்றார்.



# 1.5 பில்லியன் அமெரிக்க டொலர்கள் சுற்றுலாப் பயணிகளினால் வருமானம்

இந்த ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் சுற்றுலாப் பயணிகளின் வருகையின் மூலம் 1.5 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள வாராந்த அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது கடந்த வருடத்தின் முதல் ஆறு மாதங்களுடன் ஒப்பிடுகையில் இது 77.9 சதவீத அதிகரிப்பு எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடத்தின் முதல் ஆறு மாதங்களில் சுற்றுலா வருமானம் 875 மில்லியன் அமெரிக்க டொலராக பதிவாகியிருந்தது.

கடந்த ஜுன் மாதத்தில் சுற்றுலா வருவாயாக 151.1 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஈட்டப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அதேநேரம் இந்த வருடத்தில் முதல் பாதியில் சுற்றுலாப் பயணிகளின் வருகை 1.01 மில்லியனாக பதிவாகியுள்ளது.

இது 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 61.7 சதவீதம் அதிகரிப்பாகும் என இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.




# உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு வட்டியில்லாக் கடன்

2022 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு அரச சார்பற்ற உயர்கல்வி நிறுவனங்களில் கற்கைநெறிகளை தொடர்வதற்கு வட்டியில்லாக் கடன் வழங்கும் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

அரச பல்கலைக்கழகங்களுக்கு நுழைவதற்கு வாய்ப்பு கிடைக்காத உயர்தரம் சித்தியடைந்த மாணவர்களுக்காக இந்த வட்டியில்லாக் கடன் திட்டம், 2017ஆம் ஆண்டுக்கான வரவு – செலவு திட்டத்தில் முன்மொழிவுகளின்படி நடைமுறைப்படுத்தப்படவுள்ளதுடன், அதிகபட்சமாக 8 லட்சம் ரூபாய் வரை வட்டியில்லாக் கடன் பெற்றுக் கொடுக்கப்படவுள்ளது.

கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட 17 அரச சார்பற்ற உயர்கல்வி நிறுவனங்களில் 100 பட்டப்படிப்புகளை கற்பதற்கு 7 மாணவர் குழுக்களின் கீழ் உள்ள 17 ஆயிரத்து 313 மாணவர்களுக்கு ஏற்கனவே கடன் வழங்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ரணிலுடன் பேசுவது 'அவுட்!'

நாய் வாலை நிமிர்த்த முடியாது. நிமிர்த்த முயன்றால் அது முட்டாள்தனம்.

சிங்கள ஆட்சிப் பீடத்தில் இருக்கும் தலைவர்களிடம் நீதி, நியாயம், கௌரவமான தீர்வை எதிர்பார்ப்பதும் நாய் வாலை நிமிர்த்த முயல்வதும் ஏறத்தாழ ஒன்றுதான்.

அந்த அதிகாரத் கதிரைக்கு வந்தவுடன் பேரினவாத வெறிச் சிந்தனை தேடி வந்து ஒட்டிக்கொண்டு விடும் போல.

தானும் அந்தப் பட்டியலின் வரிசையில் மாறாப்போக்குடைய பௌத்த - சிங்களத் தலைவர்தான் என்பதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்றும் திரும்பவும் நிரூபித்திருக்கின்றார்.

தமிழர்களின் தலைவராக விளங்கிய சம்பந்தனின் இறுதி நிகழ்வில் அவர் ஆற்றிய உரை அவர் திருந்தப் போவதில்லை என்பதையே தெளிவுபடுத்தி நிற்கின்றது.

வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் மற்றைய இரண்டு பிரதான வேட்பாளர்கள் ஐக்கிய மக்கள் சக்தியின் சஜித் பிரேமதாஸவும், ஜே.வி.பி. உட்பட்ட தேசிய மக்கள் சக்தியின் அநுரகுமார திஸநாயக்கவும்.

இவர்கள் இருவரும்தான் இந்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவின் பிரதான எதிரிகள்.

இருவரும் கூட இத்தேர்தலில் சிறுபான்மையினரின் வாக்குகளை நம்பி இருக்க வேண்டிய அரசியல் கட்டாயம் உள்ளமையால், அவர்களும் இனவாதத்தை இந்தத் தேர்தலில் - பிரசாரத்தில் - பரப்புரைகளில் - முன்னெடுக்கவில்லை. சிறுபான்மையினரை அரவணைத்து, ஒன்றிணைத்துப் போகும் போக்கையே அவர்கள் கடைப்பிடிக்கின்றார்கள்.

தாங்கள் ஜனாதிபதியாகத் தெரிவானால் அரசமைப்பில் இருக்கும் 13 ஆவது திருத்தத்தின்படியான அதிகாரப் பரவலாக்கத்தை அப்படியே தருவோம் என்று இருவருமே வெளிப்படையாகக் கூறிவிட்டனர். அதனைத் தங்களின் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் வெளிப்படையாகக் குறிப்பிடுவதற்கும் அவர்கள் தாங்கள் தயார் என்று கூறிவிட்டனர்.

இதுதான் அதிகார பகிர்வுத் திட்டத்தின் முன்நடவடிக்கையாக 13ஆம் திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு பொருத்தமான சந்தர்ப்பம், அதைப் பயன்படுத்துங்கள் என்று தமிழரசுக் கட்சி எம்.பிக்களான சுமந்திரனும் சாணக்கியனும் இரண்டொரு நாள்களுக்கு முன்னர் ஒன்றாகச் சென்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து வலியுறுத்தினர்.

அதற்குப் பச்சைக் கொடி காட்டும் விதத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அன்று நடந்து கொண்டமையால், அதன் பின்னரான சம்பந்தன் ஐயாவின் இறுதி நிகழ்வில் அது குறித்து ஜனாதிபதி பிரஸ்தாபிப்பார் என எதிர்பார்க்கப்பட்டது. அதனால், அவரது அந்த அஞ்சலி நிகழ்வு உரை பல தரப்பினராலும் நேற்று உன்னிப்பாகக் கவனிக்கப்பட்டது.

ஆனால் ரணில் விக்கிரமசிங்கவோ தனது புத்தியை மாற்றிக் கொள்ளவில்லை.

சஜித் பிரேமதாஸவும் அநுரா குமார திஸநாயக்காவும் தமிழர்களின் தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வுக்கு முதல் கட்டமாக அரசமைப்பில் இருக்கும் 13 ஆம் திருத்தத்தின் நடைமுறையாக்கம் பற்றி உறுதி தந்து இருக்க, ரணிலோ தாம் அதிகாரத்திலிருந்து கொண்டு, '13 மைனஸ்' பற்றிப் பேசுகின்றார். அரசமைப்பில் வழங்கப்பட்ட பொலிஸ் அதிகாரப் பகிர்வை தமிழ் மக்களுக்கு வழங்க முடியாது என அவர் அடம் பிடிக்கிறார்.

வரும் ஜனாதிபதி தேர்தலில் யாரை ஆதரிப்பது என்ற விவகாரத்தில் மூன்று தரப்புக்களையும் சம தூரத்தில் வைத்து கையாள்வது என்றும் -

தமிழரின் தேசிய இனப் பிரச்சினைக் கானதீர்வுதொடர்பில் மூன்று வேட்பாளர்களினதும் நிலைப்பாடுகள், உறுதிமொழிகளைப் பரிசீலித்து ஒரு தீர்க்கமான முடிவு எடுப்பது என்றும் -

இலங்கை தமிழரசுக் கட்சி ஏற்கனவே தீர்மானித்திருந்தது.

அந்த வகையில் மூவரில் ஒருவரின் பெயரை பரிசீலனைப் பட்டியலில் இருந்து தமிழ் மக்கள் அடித்து நீக்க வேண்டிய வேளை நேற்று ரணிலின் உரையோடு உறுதியாகிவிட்டது.

ரணில் விக்கிரமசிங்க கூறுவது போல பொலிஸ் அதிகாரப் பகிர்வை ஒருபுறம் தூக்கி வைத்து விட்டு, தீர்வு குறித்து பேச வேண்டிய தேவை தமிழருக்கு இல்லை.

மாறாக, ரணில் விக்கிரமசிங்கவையே ஒருபுறம் தள்ளி வைத்துவிட்டு, மற்றைய இருவருடனும் தமிழ் மக்கள் இனிப் பேசுவதுதான் முறை.




# அரசியல் கொலைகள் அதிகரிப்பு; எடப்பாடி பழனிசாமி குற்றச்சாட்டு

தமிழகத்தில் அரசியல் கொலை மற்றும் கொள்ளை சம்பவங்கள் அதிகரித்துள்ளன என மதுரையில் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி குற்றஞ்சாட்டியுள்ளார்.

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் அ.தி.மு.க. முன்னாள் எம்.எல்.ஏ ஒருவரின் இல்ல திருமண விழா நேற்று நடந்தது. விழாவில் முன்னாள் முதல்வர், அ.தி.மு.க. பொதுச்செயலாளர் பழனிசாமி பங்கேற்று, மணமக்களை வாழ்த்தினார். இதன்பிறகு சென்னை செல்வதற்கு மதுரைக்கு திரும்பிய அவர், விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

“தமிழகத்தில் சட்டம், ஒழுங்கு சீர்கெட்டுள்ளது. தமிழக முழுவதும் அனைத்து குற்றங்களும் அதிகரித்துள்ளன. சமீபகாலமாக பல்வேறு கட்சித் தலைவர்கள் மர்மமான முறையில் கொல்லப்படுகின்றனர்.

குறிப்பாக நெல்லையில் கொல்லப்பட்ட காங்கிரஸ் நிர்வாகி ஜெயக்குமார் பற்றி பொலிஸார் விசாரிப்பதாகக் கூறுகின்றனர். ஆனாலும், குற்றவாளியை கண்டுபிடிக்க முடியவில்லை. 4 நாள் முன்பு சேலம் மாநகரத்தில் எங்கள் கட்சியின் மண்டல குழு முன்னாள் தலைவர் சண்முகம் படு கொலை செய்யப்பட்டார். 2 நாளுக்கு முன்பு, சென்னையில் மாநில பகுஜன் சமாஜ் கட்சி தலைவர் ஆம்ஸ்ட்ராங் படு கொலை செய்யப்பட்டுள்ளார். கொளத்தூர் தொகுதியிலேயே இச்சம்பவம் நடந்திருப்பதாக தெரிகிறது.

முதல்வர் தொகுதியிலேயே தேசிய கட்சியின் மாநிலத் தலைவர் படுகொலை செய்யப்பட்டிருப்பது சட்டம், ஒழுங்கு தமிழகத்தில் சந்தி சிரிக்கும் சூழலாக தான் பார்க்கப்படுகிறது. மக்களுக்கு மட்டுமின்றி அரசியல் தலைவர்களுக்கும் பாதுகாப்பு இல்லை. பொலிஸாரை கண்டு யாருக்கும் பயமில்லை.” – என்றார்.

# அசாமில் கடும் மழையால் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி 58 பேர் பலி



அசாமில் தொடர்ச்சியாக பெய்து வரும் கனமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி நேற்று முன்தினம் மாத்திரம் 6 பேர் உயிரிழந்துள்ளனர் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அதன்படி, அசாமில் வெள்ளத்தில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 58 ஆக அதிகரித்துள்ளமையை அசாம் பேரிடர் மேலாண் கழகம் உறுதிப்படுத்துகின்றது.

அசாமில் கடந்த மாதத்திலிருந்து தொடர்ச்சியாக பருவ மழை பெய்து வருகின்றது.

அசாமில் ஒட்டுமொத்த அளவில் வெள்ள நிலைமை ஓரளவு ஏற்பட்டபோதும், 29 மாவட்டங்களைச் சேர்ந்த 23.96 லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், அசாம் முதலமைச்சர் ஹிமந்த பிஸ்வா சர்மா கவுகாத்தியின் ஜோதி நகர் பகுதிக்கு நேற்று நேரில் சென்றார்.

வெள்ள நிலையை எதிர்கொள்ள வேண்டிய மற்றும் தீர்வு காண வேண்டிய விசயங்களை குறித்து அவர் நிபுணர்களுடன் ஆலோசனை மேற்கொண்டார் என அந்நாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.





# உக்ரைன் அதிரடி தாக்குதல்: ரஷ்யாவில் அவசரநிலை

## பற்றி எரியும் ஆயுத களஞ்சியம்

உக்ரைன் நேற்று நடத்திய ட்ரோன் தாக்குதலால் ரஷ்யாவின் வோரோனேஜ் பகுதியில் உள்ள ஆயுத கிடங்குகள் பற்றி எரிவதால் அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

ரஷ்ய பாதுகாப்பு அமைப்பால் பல ட்ரோன்கள் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், அபாயப் பகுதிகளில் உள்ள மக்களை தற்காலிகமாக வெளியேற்ற அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

ரஷ்ய ஆளில்லா விமானம் மற்றும் ஏவுகணை தாக்குதல்களால் உக்ரைன், அதன் ஆற்றல் மற்றும் குடிமக்கள் உள்கட்டமைப்பு முற்றிலுமாக சிதைந்துள்ளது, இதனையடுத்து ரஷ்யாவில் தொழில்துறை வசதிகளை உக்ரைன் குறிவைக்கத் தொடங்கியுள்ளது.

# நேபாளத்தில் சீரற்ற காலநிலை; 14 பேர் பலியாகியுள்ளனர்









நேபாளத்தில் சீரற்ற காலநிலை காரணமாக 14 பேர் பலியாகியுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சியாகப் பெய்து வரும் பலத்த மழையினைத் தொடர்ந்து ஏற்பட்ட திடீர் வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகள் காரணமாகவே இந்த உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும் 9 பேர் காணாமல் போயுள்ளனர் எனவும் அவர்களைத் தேடும் பணிகள் தொடர்வதாகவும் அந்த நாட்டு பொலிஸ் பேச்சாளர் டான் பகதூர் கார்க்கி குறிப்பிட்டுள்ளார்.

சீரற்ற காலநிலையால், அண்டை நாடுகளான இந்தியா மற்றும் பங்களாதேஷிலும் பாரிய சேதங்கள் ஏற்பட்டுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய இயற்கை அனர்த்தம் காரணமாகப் பல லட்சக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஜூன் மாதம் முதல் செப்டம்பர் மாதம் வரையிலான பருவமழை காலப்பகுதியில் இயற்கை அனர்த்தம் காரணமாக தெற்காசியாவில் ஏற்படும் இழப்புக்கள் அதிகரித்து வருவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.






# அரச ஊழியர்களுக்கு இந்த வருடம் சம்பள உயர்வை வழங்க முடியாது

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

நாட்டை பொருளாதார ரீதியில் கட்டியெழுப்பும் வேளையில் சிலர் சீர்குலைக்க முயற்சிக்கின்றனர். அரச சேவையாளர்களுக்கு இவ்வருடத்தில் மீண்டும் சம்பள அதிகரிப்பு வழங்க முடியாது. ஆனால் 2025 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவு திட்டதில் அதற்கான நிதியை ஒதுக்க முடியுமென எதிர்பார்க்கப்படுகிறது.”

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

“சட்டத்தை மதிக்கும் நாடு“ எனும் தொனிப்பொருளில் வெல்லவாய பொது விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊவா மாகாண சமூக பொலிஸ் குழு உறுப்பினர்களின் வலுவூட்டல் செயலமர்வில் கலந்து கொண்டபோதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கை பொலிஸ் திணைக்களத்தினால் நாடளாவிய ரீதியில் ஆரம்பிக்கப்பட்ட ‘யுக்திய’ நடவடிக்கைக்கு விசேட பங்களிப்பை வழங்கிய ஊவா மாகாண சமூக பொலிஸ் குழு உறுப்பினர்களுக்கான அடையாள அட்டைகளைத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கு ஜனாதிபதி வழங்கி வைத்தார். இந்த நிகழ்வில் ஜனாதிபதி மேலும் உரையாற்றுகையில் –

“90 களில் விடுமுறையில் சுவிட்சர்லாந்துக்கு சென்றிருந்தேன். நான் என் தந்தையின் நண்பர் வீட்டில் தங்கியிருந்தேன். நான் அந்த வீட்டிற்குச் சென்றபோது, இன்று மாலை உங்களைப் பார்க்கப் பொலிஸ்காரர் ஒருவர் வருவார் என்று சொன்னார். ஏன் என்று கேட்டேன். இல்லை, வெளிநாடுகளில் இருந்து நமது கிராமத்திற்கோ, நகரத்திற்கோ யாராவது வந்தால், பொலிஸாருக்கு அறிவிக்கும் வழக்கம் இங்கு உள்ளது என்றார்.

இந்தத் திட்டம் அந்த நாடுகளில் தினமும் செயல்பாட்டில் உள்ளது. வெளிநாடுகளில் இருந்து யாராவது வந்தால், அவர்களைக் கண்காணிக்கின்றனர். இதனால் அந்த பகுதிகளுக்குள் தீவிரவாதிகள் நுழைவது கடினமாகும். போதைப்பொருள் கொண்டு வருவதும் கடினம். இன்று அந்த சமூகக் காவல் முறையை ஆரம்பித்துள்ளோம். இங்கிலாந்திலும் இந்த முறை நடைமுறையில் உள்ளது. ஒவ்வொரு வீட்டிலும் யார் இருக்கிறார்கள் என்பது காவற்துறைக்குத் தெரியும். இந்தத் திட்டம் பல ஐரோப்பிய நாடுகளிலும் செயற்படுத்தப்படுகிறது.

ஆனால் இன்று லண்டன் உட்பட பல ஐரோப்பிய நகரங்களில் இந்த முறைமை சரிவைக் கண்டுள்ளது. அத

தொடர்ச்சி▼








# அரச ஊழியர்களுக்கு இந்த வருடம் சம்பள உயர்வை வழங்க முடியாது

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

தொடர்ச்சி▲

னால்தான் எல்லா இடங்களிலும் திருட்டு நடக்கிறது. போதைப்பொருள் கடத்தலும் நடக்கிறது. இவ்வாறு சட்டம் ஒழுங்கைக் கட்டுப்படுத்த முடியாமல் போனதும் ரிஷி ஷூனக் அரசின் தோல்விக்கு ஒரு காரணமாக அமைந்தது. சட்டம் ஒழுங்கை பாதுகாப்பதே அரசின் முதல் கடமையாகும் என்பதை அவர்கள் வலியுறுத்துகின்றனர்.

நாட்டில் சட்டம் ஒழுங்கை பாதுகாக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். 2021 - 2022 ஆம் ஆண்டுகளில் நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்தது. வீடுகள் அழிக்கப்பட்டன, வீடுகளுக்குத் தீ வைக்கப்பட்டன. இவ்வாறு சட்டம் - ஒழுங்கு சீர்குலைந்தபோது, அதனை சீரமைக்க வேண்டியிருந்தது.

நாட்டில் நடந்த அழிவுச் செயல்களுக்குப் பின்னால் போதைப்பொருள் வியாபாரிகளும் இருந்தனர். எனவே, நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும்போது போதைப் பொருளையும் கட்டுப்படுத்த வேண்டியிருந்தது. போதைப் பொருள் தடுப்புக்காகவே இந்த சமூக பொலிஸ் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட போது, இது வெற்றி பெறுமா இல்லையா என்ற கேள்வி எழுந்தது. ஆனால் இன்று இது ஒரு வெற்றிகரமான திட்டமாக மாறியுள்ளது.

இன்று பல பகுதிகளில் போதைப்பொருள் காரணமாக திருட்டு நடக்கிறது. போதைப் பொருள் வாங்க சிலர் திருடுகிறார்கள். இந்நிலை தொடர அனுமதிக்க முடியாது. இன்று ஆப்கானிஸ்தானில் இருந்து போதைப்பொருள் நம் நாட்டிற்கு வருகிறது.

இந்த போதைப்பொருள் பாகிஸ்தான், இந்தியா என அனைத்து நாடுகளுக்கும் வருகின்றது. இந்த போதைப் பொருள் கடத்தல் கடல் வழியாக நடைபெறுகிறது. எனவே, இந்த நடவடிக்கைகளுக்கு நாம் இப்போது கடற்படையை அனுப்ப வேண்டியுள்ளது. பிராந்தியத்தின் அனைத்து நாடுகளும் இணைந்து தீர்வு காண இப்போது முடிவு செய்துள்ளன.

அதே சமயம் கிராமங்களிலும் இந்த திட்டத்தை ஆரம்பித்துள்ளோம். பொதுச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும்போது போதைப்பொருள் கடத்தல் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும். இந்த போதைப்பொருள் வர்த்தகத்தால் எமது எதிர்கால சந்ததியினர் அழிந்து வருகின்றனர். எனவே, இதற்கு ஒத்துழைக்க வேண்டும்.

இதற்கு அனைவரும் பொலிஸாருக்கு ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதில், கிராமங்களின் விகாரைகள் உள்ளிட்ட வழிபாட்டுத் தலங்களுக்கு சிறப்புக் கடமை உள்ளது. மேலும், பாடசாலைகளிலும் இது குறித்து விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும். சில மாணவர்கள் போதைப்பொருள்களை பாடசாலைளுக்கு கொண்டு வருகின்றனர்.

எனவே, போதைப்பொருளுக்கு எதிரான சட்டத்தை கடுமையாக அமுல்படுத்தி, நாட்டில் சட்டம் ஒழுங்கை பாதுகாக்க இந்த குழுக்கள் திறம்பட செயலாற்ற வேண்டும்.

இதன்போது விருப்பம் இன்றியேனும் சிலரைத் தடுத்து வைக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. தற்போதுள்ள சட்டங்கள் போதுமானவை அல்ல. புதிய சட்டங்கள் தேவை. சிங்கப்பூரில் போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கு மரண தண்டனை நடைமுறையில் உள்ளது. நாம் அந்தளவு தூரம் செல்ல விரும்பவில்லை. ஆனால் இவர்களைத் தடுத்து காவலில் வைக்க வேண்டியது அவசியம்.

இவர்கள் கைது செய்யப்பட்ட பிறகு மனித உரிமை பற்றிப் பேசும் சில சட்டத்தரணிகள் இவர்களுக்கு உதவ முன்வருகிறார்கள். அதைப் பற்றி நான் ஆச்சரியப்படுகிறேன். போதைப்பொருள் கடத்தல் மனித உரிமை மீறல் என்று நம்புகிறேன்.

அவர்கள் போதைப்பொருள் விற்பனை மனித உரிமை மீறல் அல்ல என்கிறார்கள். ஆனால் போதைப்பொருள் வியாபாரிகளைக் கைது செய்வது மனித உரிமை மீறல் என்கிறார்கள். எனவே இது தொடர்பில் நமது நிலைப்பாடு என்ன என்பதை நாடாளுமன்றமே தீர்மானிக்க வேண்டும்.

நாட்டில் புதிய பொருளாதாரத்தை உருவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ள அதே வேளையில், அரச நிதி முகாமைத்துவத்துக்கான பணிகளையும் முன்னெடுத்து வருகிறோம். அரச நிதிச் சட்டம், அரச கடன் சட்டம், மத்திய வங்கிச் சட்டம் ஆகியவையும் தயாரிக்கப்பட்டுள்ளன. நாம் இப்போது வரவு செலவுகளையும் முகாமைத்துவம் செய்ய வேண்டியது அவசியமாகும்.

கடந்த காலங்களில் குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக அஸ்வெசும திட்டத்தை நடைமுறைப்படுத்தினோம். மேலும், அரசாங்க ஊழியர்களுக்கு பத்தாயிரம் ரூபா சம்பள உயர்வும் வழங்கப்பட்டது.

நாட்டு மக்கள் எதிர்கொள்ளும் சிரமங்களை நாங்கள் புரிந்து கொண்டுள்ளோம். எனவே, நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தல், மக்களுக்கு நிவாரணங்களை வழங்கும் பணிகளை ஒரே நேர்கோட்டில் செய்து வருகிறோம். இப்போது சிலர் சம்பள உயர்வு வேண்டும் என்கிறார்கள். இது கடினமானதாகும்.

ஆசிரியர்களுக்கு 2022 இல் சம்பள உயர்வை வழங்கியுள்ளோம். மேலும் 2024 இல் பத்தாயிரம் ரூபாய் உதவித் தொகை வழங்கப்பட்டது. எனவே அந்தக் கோரிக்கைகள் நியாயமற்றவை. அவர்கள் இரண்டு சலுகைகளைப் பெற்றாலும், மற்றவர்களுக்கு ஒரு சலுகை மட்டுமே கிடைத்தது.

அத்துடன், அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் முகாமைத்து உதவியாளர்களும் சம்பள உயர்வு கோருகின்றனர். இந்த சம்பள உயர்வு செய்தால் கொடுக்க அரசாங்கத்திடம் பணம் இல்லை. அதனால் வரியை அதிகரிக்க வேண்டும். இப்போது 18 வீதம் வற் வரி வசூலிக்கப்படுகிறது. சம்பள உயர்வு வழங்க, மீண்டும் வற் வரியை அதிகரிக்க வேண்டும். மக்களால் அதை தாங்க முடியாது.

மேலும் 10 லட்சம் அரச ஊழியர்களே நாட்டில் இருக்க வேண்டும். இப்போது 15 லட்சம் பேர் உள்ளனர். சிலர் 5 லட்சம் பேரை சம்பளமில்லாத விடுமுறையில் அனுப்பச் சொன்னார்கள். கொடுப்பனவுகளை பின்பு செலுத்தலாம் என்றும் கூறினர். 10 இலட்சம் பேருக்கு சம்பள உயர்வு வழங்க வற் வரி 18 சதவீதமாக உயர்த்த வேண்டியுள்ளது.

அப்போது எவரையும் திருப்பி அனுப்ப வேண்டாம் என்று நான் கூறினேன். வற் வரியை உயர்த்தி, அரச ஊழியர்களின் சம்பளத்தை உயர்த்தியிருந்த நிலையில், இந்த ஆண்டு மீண்டும் அவர்களுக்கு சம்பள உயர்வை வழங்க முடியாது.

அவ்வாறு சம்பள உயர்வு வழங்கினால் மக்கள் சிரமத்திற்கு உள்ளாவார்கள். இம்மாதத்தின் மத்தியிலிருந்து தேர்தலுக்குத் தயாராக வேண்டும். ஆனால் அடுத்த வருடம் முதல் சம்பள திருத்தங்கள் குறித்து ஆராய்வதற்கான குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. 2025 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் அதற்குத் தேவையான நிதியை ஒதுக்க நடவடிக்கை எடுத்து வருகிறோம்." - என்றார்.



# மட்டு. திருப்பெருந்துறையில் தென்னம் தோப்பில் கொட்டப்பட்ட குப்பை மேட்டில் பெரும் தீப் பரவல்

## மூன்று ஏக்கர் வரை நெருப்பு பரந்து எரிகின்றது

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு திருப்பெருந்துறை பிரதேசத்தில் தனியார் தென்னந் தோப்புக் காணியில் மாநகர சபையினால் கொண்டு சென்று கொட்டப்பட்ட குப்பை மேட்டில் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்ட பாரிய தீயையடுத்து அந்த பகுதியிலுள் சுமார் 3 ஏக்கர் நிலப்பரப்பில் தீ பரவியுள்ளது. இதையடுத்து தீயணைக்கும் படையினர், பொலிஸார், விசேட அதிரடிப்படையினர், தீயைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர நடவடிக்கை எடுத்துவருகின்றனர்.

இந்தப் பிரதேசத்தில் மக்கள் குடியிருப்புக்கு அருகிலுள்ள தனியாருக்குச் சொந்தமான பள்ளமாக உள்ள தென்னம் தோப்பு காணியில் குப்பைகளை கொட்டி நிரப்புவதற்காக மாநரசபைக்கு காணி உரிமையாளர்கள் இருவர் அனுமதி வழங்கியுள்ளனர்.

இதனையடுத்து 3 ஏக்கர் பரப்பளவைக் கொண்ட காணியில் தினமும் பாரியளவிலான குப்பைகளை உழவு இந்திரம் மற்றும் கனரக வாகனங்களில் கொண்டு சென்று கொட்டிவருகின்றனர்.

இந்த நிலையில் நேற்று மாலை 4 மணிக்கு குப்பைமேட்டில் தீ பற்றி எரிய ஆரம்பித்ததையடுத்து அந்தபகுதியிலுள்ள தென்னை மரங்கள் மற்றும் மரங்களில் தீப்பற்றியதுடன் சுமார் 3 ஏக்கர் நிலப்பரப்பில் தீ பரவி எரியத் தொடங்கியது. இதை அடுத்துத் தீயணைக்கும் படையினர் தீயைக் குடியிருப்புப் பகுதிகளுக்குப் பரவாமல் தடுப்பதற்கான நடவடிக்கையினை முன்னெடுத்துள்ளனர்.

அதேவேளை சம்பவ இடத்திற்கு விசேட அதிரடிப் படையினர், பொலிஸார் சென்று விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். தொடர்ந்தும் குப்பைகள் எரிந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது





# தனிப்பட்ட பழிவாங்கல்கள் எங்கள் இனத்துக்குச் சாபக்கேடாய் முடியும்

## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை தெரிவிப்பு

சைவஞானபானு, சைவத்திரு ஆறு.திருமுருகன் மீது தனிப்பட்ட பழிவாங்கல்களின் நிமித்தம் அவதூறுகளை ஏற்படுத்தவேண்டும் என்ற நோக்கத்தோடு முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளைத் தமிழ் மக்கள் இரசித்துக்கொண்டிருக்கமாட்டார்கள். இவ்வாறான தனிப்பட்ட பழிவாங்கல்கள் எங்கள் இனத்துக்கே சாபக்கேடாய் அமையும்.

இவ்வாறு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபையின் தலைவர் சின்னத்துரை தனபாலா, பொதுச் செயலாளர் வைத்தியக் கலாநிதி கி.பிரதாபன் ஆகியோர் இணைந்து அனுப்பி வைத்துள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சைவஞானபானு, சைவத்திரு ஆறு. திருமுருகன், யாழ்ப்பாணத்தில் இருந்து அகில இலங்கை ரீதியிலும் சைவப்பணிகளையும் தமிழ், சமூகப் பணிகளையும் ஒருங்கே முன்னெடுத்துவரும் சிவநேயச்செல்வர்.

இலங்கைத் தமிழ் மக்களுக்கு ஒரு ஆன்மீக அரசியல் வாழ்வியல் வழிகாட்டியாக விளங்கிவரும் சிறப்பிற்குரியவர்.

சிவபூமி அறக்கட்டளை, அகில இலங்கை இந்து மாமன்றம், அருள்மிகு துர்க்காதேவி திருக்கோயில் நிர்வாகம் என்று பலதரப்பட்ட வழிகளிலும் ஓயாது பணியாற்றிக் கொண்டிருக்கும் சைவஞானபானுபால் தமிழ் மக்களுக்கு என்றும் அன்பும் நன்றியும் இருக்கும் என்பதை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை தெரிவித்துக் கொள்வது கடமையாகும்.

அருள்மிகு சிவகாமியுடனாய கூத்தப்பெருமானின் திருவருள் சைவஞானபானு ஆறு திருமுருகன் மீது விளங்கி, காழ்ப்புணர்வால் ஏற்படுத்தப்பட்ட விமர்சனங்களைக் கடந்து, சைவத் தமிழ்ப் பணிகளை மிடுக்குடன் முன்னெடுக்க துணைநிற்க வேண்டிக்கொள்கிறோம்.

தனிப்பட்ட பழிவாங்கல்கள் எங்கள் இனததுக்கு சாபக் கேடாய் முடியும் என்பதை அனைத்துத் தரப்பினரும் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும் என்று எமது சபை மிகவும் கரிசனையோடு வேண்டிக் கொள்கின்றது.- என்றுள்ளது.



# ஆறு திருமுருகனுக்கு அவப்பெயரை ஏற்படுத்திய பத்திரிகை செய்தியை வன்மையாகக் கண்டிக்கிறோம்

## மானிப்பாய், மருதடி விநாயகர் ஆலய தர்மகர்த்தா சபை

சைவத்தினதும் தமிழினதும் ஆகப்பெரும் ஆழுமையாக உள்ள ஆறு திருமுருகன் ஐயாவுக்கு அவப்பெயரை ஏற்படுத்தும் விதமாக வெளியிடப்பட்ட பத்திரிகை செய்தியைக் கண்டிக்கிறோம்.

தனிப்பட்ட காரணங்களுக்காகப் புகழ்பெற்ற மனிதரின் மீது வன்மத்துடன் இந்தச் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

இவ்வாறு மானிப்பாய், மருதடிவிநாயகர் ஆலய தர்மகர்த்தா சபை தெரிவித்துள்ளது.

காலத்தின் தேவையாக வரலாற்றின் தெரிவாக சைவசமயத்துக்கும் தமிழுக்கும் தொடர்ந்து தொண்டாற்றி தன்வாழ்வையே அதற்காக அற்பணித்துக் கொண்டிருப்பவர் ஐயா ஆறுதிருமுருன்.

திட்டமிட்டு அவர்மீது அவதூறுகளை பரப்புவதை பார்த்து தமிழ்மக்களும் சைவத்தவரும் வாழாவிருப்பது ஏற்புடையதாகாது. அவருக்கு ஆதரவாக உடனிருப்போம் என்று மேலும் தெரிவித்துள்ளது.



# தெல். துர்க்காதேவி மகளிர் இல்லத்துக்கு எதிரான செயற்பாடுகளை நிறுத்துங்கள்!

## ஜனாதிபதியிடம் பாபுசர்மா கோரிக்கை

தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தான அம்பாள் ஆலய மகளிர் இல்லத்துக்கு எதிராக அரச உயரதிகாரிகள் ஒரு சிலரும் ஊடகங்கள் சிலவும் இணைந்து முன்னெடுத்த செயற்பாடுகள் இலங்கை வாழ் சைவ இந்து மக்கள் மத்தியில் மிகுந்த வேதனையையும் மனவருத்தத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்தச் செயற்பாடுகள் தனிப்பட்ட பழிவாங்கல் மற்றும் ஒரு மதத்தின் வளர்ச்சியை மழுங்கடிக்கும் திட்டமிட்ட செயற்பாடாகவே நோக்கப்படுகின்றது.

தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தான அம்பாள் ஆலய மகளிர் இல்லத்துக்கு எதிரான திட்டமிட்ட செயற்பாடுகளை உடன்நிறுத்தி, பக்கச்சார்பற்ற விதத்தில் விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு சர்வதேச இந்து மத பீடத்தின் செயலாளரும், நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரின் தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்துக்கான ஒருங்கிணைப்பாளருமான கலாநிதி இராமச்சந்திரக் குருக்கள் பாபுசர்மா ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எழுதிய அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி ஆலய மகளிர் இல்லத்துக்கு எதிராக அரச உயரதிகாரிகளும் ஊடகங்கள் சிலவும் இணைந்து முன்னெடுத்த செயற்பாடுகள் இலங்கை வாழ் சைவ இந்து மக்கள் மத்தியில் மிகுந்த வேதனையையும் மனவருத்தத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இந்தச் செயற்பாடுகள் தனிப்பட்ட பழிவாங்கல் மற்றும் ஒரு மதத்தின் வளர்ச்சியை மழுங்கடிக்கும் திட்டமிட்ட செயற்பாடாகவே நோக்கப்படுகின்றது.

பேச்சுச் சுதந்திரமும் கருத்துச் சுதந்திரமும் உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட உரிமைகளாயினும், அதுவே பிறரது சுதந்திரத்துக்குப் பாதகம் தருவதாக இருந்தால் அதனை எவரும் ஏற்கமாட்டார்கள்.

மத நல்லிணக்கம் என்பது ஒரு நாட்டின் ஆரோக்கியமான சூழலுக்கும் முன்னேற்றகாரமான எதிர்காலம் நோக்கிய பயணத்துக்கும் அவசியமானதொன்று. இந்தச் செயற்பாட்டில் நாட்டின் அரசியல் வாதிகளதும் அரச அதிகாரிகளதும் செயற்பாடுகள் காத்திரமிக்கவை. அத்தகைய பொறுப்பு வாய்ந்தவர்களின் பிழையான கருத்துகள் மற்றும் பக்கச் சார்பான செயற்பாடுகள் மத நல்லிணக்கத்துக்கும் மத சுதேசிகளுக்கும் பங்கம் விளைவிப்பதாக அமைந்துவிடும்.

மத ரீதியாகப் பிறர் செய்கின்ற நல்ல காரியங்களுக்குச் சேறுபூசுவதும் அதற்கு ஊடகங்கள் துணை போவதும் பிழையான கருத்துகள் தவறான விதத்தில் சமூகத்தில் பரப்பப்படுவதும் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தவைக்கும்.

எமது தேசத்தில் சக மதங்களைக் கேலி செய்யும் போக்குகள் கண்டிக்கப்படாமல் நாளுக்குநாள் அதிகரித்துச் செல்லும் நிலை கேட்பாரற்றதாகிவிட்டது. இத்தகைய மத நிந்தனைப் பேச்சுக்களுக்கு எதிரான பாரபட்சம் அற்ற கடுமையான சட்டம் அமுலாக்கப்பட வேண்டும்.

மதரீதியாக, உண்மைத் தன்மையோடு நியாய பூர்வமாகச் செயற்படும் சமூக சேவையாளர்களுக்கும் அவர்கள் தம் சேவைகளுக்கும் ஊடகங்கள் மூலம் ஏற்படுத்தப்படும் அபகீர்த்தியான செயற்பாடுகளுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

மக்களின் இன மத உணர்வுகளைப் பாதிக்கும் வகையில் செயற்படும் ஊடகங்கள் தடைசெய்யப்படவேண்டும்.

இத்தகைய நிலையில் நாம் எமது சைவ மக்கள் சார்பாக, இந்த நாட்டில் சைவசமய செயற்பாடுகளுக்கு எதிரான நடவடிக்கைகளை முன்னெடுக்கும் அனைவரையும் சட்டத்தின் முன் நிறுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். அத்துடன் கடந்த வாரம், யாழ்பாணம், தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தான அம்பாள் ஆலய மகளிர் இல்லத்திற்கு எதிராக அரச உயரதிகாரிகளும் ஊடகங்கள் சிலவும் இணைந்து முன்னெடுத்த செயற்பாடுகளை உடன்நிறுத்தி, பக்கச்சார்பற்ற விதத்தில் விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.- என்றுள்ளது.



# மிகவும் உயர்ந்த நிலையில் இருக்கும் இல்லத்தை திட்டமிட்டு அழிப்பதற்குச் சிலர் முன்வந்துள்ளனர்!

## திட்டமிட்டு பழிவாங்கும் செயற்பாடு என்று ஆதீன ஆளுநர் சபை கண்டனம்

மிக உயர்ந்த நிலையில் இருக்கும் இல்லத்தைத் திட்டமிட்டு அழிப்பதற்குச் சிலர் முன்வந்திருக்கின்றார்கள். இந்த நிலையில் இல்லத்தின் பாதுகாப்புக்காகத் தொடர்ந்து பொலிஸார் வலியுறுத்தியயன் விளைவாக சென்ற ஆண்டு பொருத்தப்பட்ட கண்காணிப்புக் கமராவை அடிப்படையாக வைத்து அசிங்கமாக புனைகதைகளை உருவாக்கி இல்லத்தை மூட எத்தனிக்கிறார்கள்.

பொறுப்பு வாய்ந்த அரச உயர் அதிகாரிகள் ஒரு சிலர் வேண்டுமென்று திட்டமிட்டு எழுதிய முறைப்பாட்டுக்காகப் பொறுப்பின்றி பெருமை வாய்ந்த பாரிய இல்லத்தை மூடுங்கள் என கூறிய வார்த்தை மிகவும் வேதனை தருகின்றது.

இவ்வாறு நல்லை ஆதீன குருமுதல்வர், யாழ்ப்பாணம் வேதாந்தமட குருமுதல்வர், கிளிநொச்சி சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார், கோப்பாய் சுப்பிரமுனிய கோட்ட குருமுதல்வர் ஆகியோர் இணைந்து நல்லை ஆதீன ஆளுநர் சபையூடாக விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

பழமையும் பெருமையும் வாய்ந்த தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானம் நடத்தும் துர்க்காபுரம் மகளிர் இல்லம் (ஆன்மீக விடுதிச்சாலை) தொடர்பாக பொறுப்பற்ற விதத்தில் வெளியிடப்பட்ட விடயம் தொடர்பாக நாம் அதிர்ச்சியும் கவலையும் அடைகின்றோம்.

42 வருடங்களாக இலங்கையில் மிகப்பெரிய சைவப் பெண்கள் நிலையமாக விளங்கிவரும் மகளிர் இல்லத்தையும், தன் வாழ்வை அர்ப்பணித்து சைவத்துக்கும் தமிழுக்கும் பெருந்தொண்டாற்றிவரும் செற்சொற்செல்வர் ஆறு திருமுருகனையும் திட்டமிட்டு விமர்சித்து யாழ். குடாநாட்டில் வெளிவரும் உதயன் பத்திரிகை வெளியிட்ட செய்தி மிகவும் கொடூரமானது.

அன்னை செல்வி தங்கம்மா அப்பாகுட்டியால் 1982 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இல்லம் போர்க் காலச் சூழலில் எத்தனையோ ஏழைக் குழந்தைகளை வளர்த்தெடுத்தது.

மின்சாரம் இல்லாத காலத்திலும் உணவுத் தட்டுப்பாட்டுக் காலத்திலும் இடப்பெயர்வுகளின் போதும் இவ் இல்லப் பிள்ளைகள் சொல்லொணாத் துயரங்களைச் சந்தித்து வளர்தெடுக்கப்பட்டனர்.

1995 ஆம் ஆண்டு முதல் அன்னை தங்கம்மா அப்பாக்குட்டியால் இவ்வரிய பணிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நிர்வாகத்தில் இணைக்கப்பட்டவர் கலாநிதி ஆறு திருமுருகன்.

14 ஆண்டுகள் நிர்வாக சபையில் பணியாற்றி இணைச் செயலாளராக நியமிக்கப்பட்டு 2008 ஆம் ஆண்டில் துன்னையின் மறைவின் பின் பலரது வேண்டுகோளுக்கு அமைய ஆறு திருமுருகன் தலைமைப் பொறுப்பேற்றார்.

அவர் தனது தலைமைப் பொறுப்பில் இருந்தவேளை 2009 யுத்தத்தின் போது பாதிக்கப்பட்டு வவுனியாவில் தஞ்சமடைந்த பல பெண் பிள்ளைகளை வவுனியா மாவட்ட நீதிமன்றின் அனுமதியுடன் இந்த இல்லத்தில் இணைத்தார்.

சுமார் 140 பெண் பிள்ளைகளை மிகக் கஷ்டமான காலத்தில் பொறுப்பெடுத்து அவர்கள் இன்று பெரும்பாலும் பட்டதாரிகளாக உயர்நிலையில் வாழ்கின்றார்கள்.

துர்க்காபுரம் மகளிர் இல்லத்துக்கு 2012 ஆம் ஆண்டு புகழ்பூத்த பெண் அதிபர் திருமதி சிவமலர் அனந்தசயனிடம் (இளைப்பாறிய அதிபர், தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி) இல்லத்தின் பெரும் பொறுப்பை ஒப்படைத்தார்.

மகளிர் இல்லத்தின் முழுப்பொறுப்பையும் இன்றுவரை இந்தப் பெண்மணி சிறப்பாக வழிநடத்துகின்றார். சிறந்த கல்விப் பெறுபேறு கிடைக்கிறது. தற்போது 28 பிள்ளைகள் ஒரே காலத்தில் இலங்கைப் பல்கலைக் கழகங்களில் கல்வி கற்று வருகின்றார்கள். முதலாவது பொறியியல் மாணவி பட்டப்படிப்பை முடித்து பணி செய்கின்றார்.

மிக உயர்ந்த நிலையில் இருக்கும் இல்லத்தைத் திட்டமிட்டு அழிப்பதற்குச் சிலர் முன்வந்திருக்கின்றார்கள். இந்த நிலையில் இல்லத்தின் பாதுகாப்புக்காகத் தொடர்ந்து பொலிஸார் வலியுறுத்தியயன் விளைவாக சென்ற ஆண்டு பொருத்தப்பட்ட கண்காணிப்புக் கமராவை அடிப்படையாக வைத்து அசிங்கமாக புனைகதைகளை உருவாக்கி இல்லத்தை மூட எத்தனிக்கிறார்கள்.

பொறுப்பு வாய்ந்த அரச உயர் அதிகாரிகள் ஒரு சிலர் வேண்டுமென்று திட்டமிட்டு எழுதிய முறைப்பாட்டுக்காகப் பொறுப்பின்றி பெருமை வாய்ந்த பாரிய இல்லத்தை மூடுங்கள் என கூறிய வார்த்தை மிகவும் வேதனை தருகின்றது.

யாழ்ப்பாணத்தில் வெளிவரும் அச்சு ஊடகமாகிய உதயன் பத்திரிகை இயங்கும் கட்டடம் சிவபூமி அறக்கட்டளைக்கு உரித்தானது. அத்தர்ம சாசனத்தை ஒப்படைக்க மறுக்கும் இந்த நிறுவனம் திட்டமிட்டு பழிவாங்கும் நோக்கில் ஆறு திருமுருகனது பெயரைக் குறித்து எழுதியதோடு, அவரது சிவபூமி அறக்கட்டளையையும் தேவையில்லாமல் குறித்து பத்திரிகையில் முன்பக்கத்தில் தலைப்புச் செய்தியாக வெளியிட்டமை மாபெரும் தவறாகும்.

இது குறித்து இலங்கையிலுள்ள உயர் சைவ ஆதீனமாகிய நல்லை ஆதீனத்தின் முதல்வரும் ஆதீன ஆளுநர் சபையைச் சார்ந்தவர்களும் எங்கள் கவலையைத் தெரிவிப்பதோடு பொறுப்பற்ற விதத்தில் நடந்த அரச அதிகாரிகளையும் செய்தி வெளியிட்ட பத்திரிகையையும் மிகவும் கண்டித்து எமது கண்டன அறிக்கையை வெளியிடுகிறோம்.

எதிர்காலத்தில் இவ்வாறான விடயங்களைக் கையாள்வதில் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என வேண்டுகின்றோம்.– என்றுள்ளது.




### ஆறு. திருமுருகன் மீது அபாண்டப் பழிசுமத்தும்

# ஊடகத்தாரையும் அதிகாரிகளையும் இரு ஆதீனங்கள் சேர்ந்து கண்டனம்

செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள் மீதான அபாண்டமான பழிசுமத்தலுக்கு எதிராக இலங்கையின் இரு ஆதீன குரு முதல்வர்கள் வன்மையான கண்டனங்களை வெளியிட்டிருக்கின்றனர்.

யாழ்ப்பாணம் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் குரு மஹா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் மற்றும் திருக்கேதீஸ்வரம் தருமை ஆதீனத்தின் கட்டளைத் தம்பிரான் ஸ்ரீமத் மீனாட்சி சுந்தர தம்பிரான் சுவாமிகள் ஆகியோரே இது தொடர்பில் கூட்டாக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர். அதில் கூறப்பட்டிருப்பவை வருமாறு:-

சிவபூமி எனப் போற்றப்படுகின்ற ஈழமணித் திருநாட்டில் சைவத்தையும் தமிழையும் வாழ வைப்பதற்காகத் தன்னை அர்ப்பணித்துச் செயலாற்றும் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்களின் அப்பழுக்கற்ற திருத் தொண்டை சைவ உலகோர் நன்கறிவர். ஈழத்தில் வாழும் சைவத் தமிழ் மக்களின் அடையாளமாகக் கொள்ளத் தக்க தலைவராகத் திகழும் இப்பெருமகன் மீது தனிப்பட்ட காழ்ப்புணர்வு கொண்டு செயற்படும் ஊடகத்தாரையும் சமயக்காழ்ப்புணர்வுடன் செயற்படும் அதிகாரிகளையும் கண்டு மனவேதனையடைவதோடு எமது வன்மையான கண்டனங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சைவசமயத்தவரின் காவலனாகத் திகழும் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள் மீது பழி சுமத்துவதன் ஊடாக ஈழத்தில் சைவத்தையும் தமிழையும் நிலைகுலையச் செய்யலாம் என்ற எண்ணம் இத்தகைய கொடூரர்களின் மனத்தில் உள்ளதோ என ஐயுறவு கொள்ள வேண்டியுள்ளது.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலருக்குப் பின்னர் அவரு டைய வழித்தடத்தில் செயற்பட்டு வரும் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்களை சைவ உல கோர் நன்கறிவர். அவர் இச்சவால் மிகுந்த சந்தர்ப்பத்தில் சளைக்காது இன்னும் பன்மடங்கு தனது சேவைகளை சைவத்திற்கும் தமிழிற்கும் ஆற்ற வேண்டும் என இத்தால் வேண்டுகின்றோம்.

"துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி இன்பம் பயக்கும் வினை" என்ற வள்ளுவர் வாக்கை செஞ்சொற்செல்வர் கலா நிதி ஆறு. திருமுருகன் அவர்களுக்கும் –

"கெடுவல்யான் என்பது அறிக தன்நெஞ்சம் நடுவொரீஇ, அல்ல செயின்" என்ற வள்ளுவன் வாக்கை கேடுவிளைவிப் போருக்கும் இதன்மூலம் யாம் அறிவுறுத்துகின்றோம். – என்று உள்ளது.

# மாணவர்களுக்கு அடுத்த வாரம் ஜனாதிபதியின் புலமைப்பரிசில்

ජනාධිපති අරමුදල
ஜனாதிபதி நிதியம்
President's Fund

முதலாம் வகுப்பு முதல் 11ஆம் வகுப்பு வரையிலும் மற்றும் உயர்தரத்தில் கல்வி கற்கும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு, ஜனாதிபதி நிதியத்தின் மூலம் வழங்கப்படும் புலமைப்பரிசில்களை நடைமுறைப்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டம் இம்மாதம் 12 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் ஒவ்வொரு மாவட்ட மட்டத்திலும் ஆரம்பிக் கப்படவுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள் ளது.

உயர்தர மாணவர்களுக்கு மாதாந்தம் 6,000 ரூபா வீதம் 24 மாதங்களுக்கு ஒவ்வொரு கல்வி வலயத்திலிருந்தும் 60 மாணவர்கள் தெரிவு செய்யப்படவுள்ளதுடன், 6,000 மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

அத்துடன், தெரிவு செய்யப்பட்ட முதலாம் வகுப்பு முதல் 11ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு 12 மாத காலத்திற்கு மாதாந்தம் 3,000 ரூபாய் வழங்கப்படும் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.




# வவுனியா பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று கட்சி ஆதரவாளர்களுடன் அமைச்சர் டக்ளஸ் கலந்தாய்வு

(வவுனியா நிருபர்)

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் (ஈ.பி.டி.பியின்) ஆதரவாளர்களுடன் கட்சியின் தலைவரும், கடற்தொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா வவுனியா பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று சந்திப்பு ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

நாடாளுமன்ற உறுப்பினரும், வவுனியா அபிவிருத்திக் குழுத் தலைவருமாகிய கு.திலீபன் தலைமையில் இடம்பெற்ற இந்த கலந்துரையாடலில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த ஈழமக்கள் ஜனநாயககட்சியின் ஆதரவாளர்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது கட்சியன் எதிர்கால நடவடிக்கைகள், அபிவிருத்தி நடவடிக்கைகள், தேர்தலை எதிர்கொள்வது என பல்வேறு விடயங்கள் தொடர்பாக ஆதரவாளர்களின் கேள்விகளுக்கு அமைச்சர் பதில் அளித்திருந்தார்.













# சம்பந்தன் இறுதி நிகழ்வுக் காட்சிகள்














# சம்பந்தனுக்கு நெடுந்தீவில் அஞ்சலி நிகழ்வு





தமிழரசுக் கட்சியின் நெடுந்தீவு கிளையின் ஏற்பாட்டில் கட்சி அலுவலகத்தில் நேற்றுக் காலை 10.00 மணியளவில் தமிழரசுக் கட்சியின் நெடுந்தீவுக் கிளைச் செயலாளர் வி.ருத்திரன் தலைமையில் இந்த அஞ்சலி நிகழ்வு நடைபெற்றது

நிகழ்வில் பொதுச்சுடர் ஏற்றப்பட்டு மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் வண.போதகர் யூட் எழில் அமுதன், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் பரமேஸ்வரி, கட்சியின் நெடுந்தீவுக் கிளை உபதலைவர் மைக்கல் யேசுதாஸன், கட்சியின் நெடுந்தீவு கிளை உபசெயலாளர் சுதன் உள்ளிட்ட கட்சியின் முக்கியஸ்தர்கள், ஆதரவாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.



















# சம்பந்தனுக்கு அம்பாறை மக்கள் நேற்று நேரில் சென்று அஞ்சலி செலுத்தினர்

(வி.ரி. சகாதேவராஜா)

மறைந்த தமிழ்த் தலைவர் இரா. சம்பந்தனுக்கு அம்பாறை மாவட்டத்தில் இருந்தும் இறுதி மரியாதை செலுத்தப்பட்டது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை திருகோணமலைக்குச் சென்று இந்த இறுதி மரியாதையைச் செலுத்தினர்.

அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன், காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில், உறுப்பினர் திருமதி எஸ்.ஜெயராணி மற்றும் திருமதி கீதா ஜெயசிறில் ஆகியோரும் இறுதி அஞ்சலி செலுத்தினார்கள்.


















# சாவகச்சேரி வைத்திய அத்தியட்சகருக்கு ஞாயிறு இரவு 7 மணிக்கு இடமாற்றக் கடிதத்துடன் வந்த சுகாதார சேவைகள் பணிப்பாளர்!

**(த.சுபேசன்)**

சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனாவுக்கான இடமாற்றக் கடிதத்தோடு நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவு 7மணிக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வருகை தந்திருந்த நிலையில் வைத்திய அத்தியட்சகர் அர்ச்சுனா அக்கடிதத்தை ஏற்க மறுத்துள்ளார்.

ஞாயிற்றுக்கிழமை இரவு 7மணியளவில் வைத்திய அத்தியட்சகருக்கான இடமாற்றக் கடிதத்துடன் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பொலிஸ் பாதுகாப்பு சகிதம் வருகை தந்திருந்த போதிலும் வைத்திய அத்தியட்சகர், “இது அலுவலக நேரம் அல்ல, எனவே கடிதத்தை ஏற்க முடியாது“ – எனக் கூறி திருப்பி அனுப்பியுள்ளார்.

இன்று திங்கட்கிழமை காலை தென்மராட்சி மக்கள் இணைந்து வைத்திய அத்தியட்சகர் அர்ச்சுனாவுக்கு ஆதரவளித்தும், வைத்தியசாலையை வழமை போன்று இயங்க வைக்கக் கோரியும், ஆர்ப்பாட்டம் இடம்பெறவுள்ள நிலையில் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் இவ்வாறு இடமாற்றக் கடிதத்தோடு வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைத் தேவைக்கு தற்காலிக மின்பிறப்பாக்கி பெற்றுத்தரத் தயார்!

## அங்கஜன் இராமநாதன் எம்.பி. தெரிவிப்பு

**(த.சுபேசன்)**

சாவகச்சேரி ஆதார வைத்திய சாலைக்குத் தற்காலிக மின்பிறப்பாக்கியைப் பெற்றுத்தர தயார் என யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரியப்படுத்தியுள்ளார்.

இது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில் –

சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் அண்மைய நாள்களாக தொடரும் சிக்கல் நிலை தொடர்பில் தொடர்ச்சியாகக் கவனித்து வருகிறேன்.

வைத்தியசாலையின் விபத்து மற்றும் சத்திர சிகிச்சைகள் பிரிவு உள்ளிட்ட பிரிவுகள் மின்சார மாற்றீடுகள் (Power Backup) இல்லாததாலும், அதற்கான மின்பிறப்பாக்கிகள் வழங்கப்படாத நிலையாலும் மருத்துவப் பயன்பாடுகள் அற்ற நிலையில் காணப்படுகின்றன எனக் கடந்த நாள்களில் அறிய முடிந்தது.

இத்தகைய சூழலில் இந்தப் பிரிவுகளை ஆரம்பிப்பதற்கு ஆட்சேபனை தெரிவித்து வைத்தியர்களினால் முன்னெடுக்கப்படும் பணிப்புறக் கணிப்பை முடிவுக்குக் கொண்டுவருவதன் அவசியத்தையும் உணர்ந்து, இவ்விடயம் தொடர்பில் ஆர்வலர்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டிருந்தேன்.



அதன்படி, சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு அரசாங்கத்தால் போதிய மின்பிறப்பாக்கி வசதிகள் வழங்கப்படும்வரை, சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கான மின்பிறப்பாக்கிகளை தற்காலிக ஏற்பாட்டில் பெற்றுக் கொடுக்க அன்பர்கள் சிலர் முன்வந்துள்ளனர்.

இதனூடாக வைத்தியசாலையின் சத்திரசிகிச்சை பிரிவுகள் உள்ளிட்டவற்றை இயங்குநிலைக்கு கொண்டு வந்து மக்களுக்கான வைத்திய சேவையை வினைத்திறனுடன் வழங்கமுடியும் எனக் கருதுகிறேன்.

எனவே இதுதொடர்பில் வைத்தியசாலையின் தற்போதைய பதில் வைத்திய அத்தியட்சகர் அர்ச்சுனா, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் ஆகியோரின் பதிலுக்காகக் காத்திருக்கிறேன். – என மேலும் அவர் தெரிவித்துள்ளார்.



# உடற்கூற்றியல் வினாடி வினாப்போட்டியில் யாழ் மருத்துவபீட அணி இரண்டாம் இடம்

இலங்கை மருத்துவபீடங்களிற்கு இடையிலான உடற்கூற்றியல் வினாடி வினாப்போட்டியில் யாழ் மருத்துவ பீட அணி இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது.

இலங்கை உடற்கூற்றியல் சமூகத்தின் வருடாந்த அமர்வின் ஒரு பகுதியாக இந்த உடற்கூற்றியல் வினாடிவினாப் போட்டியானது இரண்டாவது முறையாக இவ்வருடமும் நடைபெற்றது.

இருபகுதிகளாக நடைபெற்ற இப் போட்டியில் பத்து அணிகள் பங்குபற்றி இருந்தமையுடன் முதல் பகுதி முடிவில் மூன்று சிறந்த அணிகளாக யாழ்ப்பாணம், கொழும்பு மற்றும் பேராதனை பல்கலைக் கழகங்களை சேர்ந்த மருத்துவ பீட அணிகள் தெரிவு செய்யப்பட்டன.

மேற்படி மூன்று அணிகளிற்கும் இடையிலான இறுதி சுற்றுப போட்டியானது கடந்த மாதம் 30ம் திகதி இலங்கை மருத்துவ சங்கக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.



இதன்முடிவில் கொழும்பு மருத்துவ பீட அணி முதலாம் இடத்தையும், யாழ் மருத்துவ பீட அணி இரண்டாம் இடத்தையும், பேராதனை மருத்துவ பீட அணி மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

யாழ் மருத்துவ பீட அணியை பிரதிநிதித்துவப்படுத்தி விநாயகமூர்த்தி திவாகரன், சிறிஸ்கந்தராஜா லக்சன், அஸ்லாம் பாத்திமா ஹம்தா மற்றும் யுதாரா ரண்லினி ரணசிங்க ஆகியோர் போட்டியிட்டனர்.

மேற்படி மாணவர்களுக்கான தகுந்த ஆலோசனைகளையும் பயிற்சிகளையும் சிரேஷ்ட விரிவுரையாளர்களான சிவநந்தினி உதயகுமார், துரைரட்ணம் செந்தூரன் ஆகியோரின் வழிகாட்டலின் கீழ் யாழ் மருத்துவபீட உடற்கூற்றியல் துறை வளவாளர்கள் வழங்கினர்.

# தொடர்ந்தும் குளவிக் கொட்டுக்கு இலக்காகும் பெண் தொழிலாளர்கள்

(மஸ்கெலியா நிருபர்)

மஸ்கெலியா பகுதியில் பெண் தொழிலாளர்கள் தொடர்ச்சியாகக் குளவிக் கொட்டுக்கு இலக்காகி வருகின்றனர்.

நேற்று மதியம் மஸ்கெலியா பிரதேச சபைக்கு உட்பட்ட பகுயான மொக்கா தோட்ட கீழ் பிரிவில் உள்ள பெண் தொழிலாளர்கள் கொழுந்து பறித்துக் கொண்டு இருந்த வேளையில் தேயிலை செடியின் வேர் பகுதியில் கட்டப்பட்டிருந்த குளவிக் கூடு கலைந்து கொட்டியதில் இரண்டு பெண்கள் பாதிக்கப்பட்டனர். அவர்கள் மஸ்கெலியா மாவட்ட வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.



இவ்வாறு குளவி கொட்டுக்கு இலக்கிய அந்தோனி விஜித்திரா (வயது 42), கே.கலைமணி (வயது 41,)ஆகிய இருவருமே குளவிக் கொட்டுக்கு இலக்காகினர்.

தேயிலை செடிகள் உயர்ந்த நிலையில் உள்ளதால் செடியின் வேர் பகுதியில் உள்ள குளவி கூடுகள் வெளியே தெரிவதில்லை என பாதிக்கப்பட்ட பெண்கள் கூறுகின்றனர்.

# நாட்டின் கறுவா ஏற்றுமதி மூலம் 15 மில்லியன் ரூபா வருமானம்!

கறுவா ஏற்றுமதி மூலம் வருடத்தின் முதல் 6 மாதங்களில் 15 மில்லியன் ரூபா வருமானம் ஈட்டப்பட்டுள்ளதாக கறுவா அபிவிருத்தி திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்தக் காலப்பகுதியில் 60 மெட்ரிக் தொன் கறுவா ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதாக அதன் பணிப்பாளர் நாயகம் ஜனக லிந்தர குறிப்பிட்டுள்ளார்.



மெக்ஸிகோ, பெரு மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளுக்கே அதிகளவில் கறுவா ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு 251 மெட்ரிக் தொன் கறுவா ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.



# வவுனியாவில் மாட்டைக் கடத்திச் சென்ற இருவர் பொதுமக்களால் மடக்கப்பட்டு நையப்புடைப்பு!

## பின்னர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்

**(கே.வசந்தன்)**

வவுனியா, தாண்டிக்குளம் பகுதியில் மாட்டைக் கடத்திச் சென்ற இருவரை மடக்கிப் பிடித்த அப்பகுதி இளைஞர்கள் அவர்களை நையப்புடைத்த பின்னர் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றது. இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது :-

வவுனியா, பத்தினியார் மகிழங்குளம் பகுதியில் காணி ஒன்றில் கட்டி நின்ற மாட்டை திருடிச் சென்ற இருவரை தாண்டிக்குளம் பகுதியில் வழி மறித்த இளைஞர்கள் அவர்களை கட்டி வைத்து நையப்புடைத்ததுடன், வவுனியா பொலிஸாருக்கும் தகவல் வழங்கியிருந்தனர்.

சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் இந்த விடயம் தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்தனர். இதன் போது குறித்த இருவர் மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்குமாறு அங்கு ஒன்று கூடிய பொதுமக்கள் பொலிஸாருக்குத் தெரிவித்தனர். இதனால் பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் சற்றுநேரம் முரண்பாடான நிலமை ஏற்பட்டிருந்தது.



எனினும் குறித்த இருவரையும் கைது செய்து உரிய நடவடிக்கை எடுப்பதாக பொலிஸார் பொதுமக்களிடத்தில் உறுதியளித்த நிலையில் நிலமை கட்டுப்பாட்டிற்குள் வந்தது.

அத்துடன் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கு. திலீபன் சம்பவ இடத்திற்கு சென்று பொலிஸார் மற்றும் பொது மக்களுடன் கலந்துரையாடியமையுடன் மேற்படி இருவருக்கும் எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்குமாறும் பொலிஸாரிடம் வலியுறுத்தினார்.

வவுனியாவில் கடந்த சில மாதங்களாக மாடுகள் திருடப்படும் சம்பவங்கள் அதிகரித்துச் செல்கின்றமை தொடர்பாக பொதுமக்களால் தொடர்ச்சியான முறைப்பாடுகள் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# களு கங்கையின் நீர்மட்டம் உயர்வு; வெள்ள அபாய எச்சரிக்கை விடுப்பு

களு கங்கையின் நீர்மட்டம் உயர்வடைந்துள்ள நிலையில், மில்லக்கந்த பகுதிக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மறுஅறிவித்தல் வரையில் அரபிக்கடலுக்கு செல்ல வேண்டாமென வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தல் விடுத்துள்ளது.

அரபிக்கடல் பிராந்தியத்தில் மணிக்கு 70 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசுமெனவும் இதனால் கடல் கொந்தளிப்பாகக் காணப்படுமெனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, இரத்தினபுரி, களுத்துறை மாவட்டங்களின் சில பிரதேச செயலக பிரிவுகளுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை நீடிக்கப்பட்டுள்ளது.

களுத்துறை மாவட்டத்தின் இங்கிரிய, மத்துகம, புளத்சிங்கள ஆகிய பிரதேச செயலக பிரிவுகளுக்கும் இரத்தினபுரி மாவட்டத்தின் அயகம, எஹெலியகொட, எலபாத்த, கிரிஎல்ல, குருவிட்ட, இரத்தினபுரி ஆகிய பிரதேச செயலக பிரிவுகளுக்கும் மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நாட்டின் தென்மேற்கு பிராந்தியத்தில் எதிர்வரும் நாள்களில் மழையுடனான வானிலை அதிகரிக்கும் சாத்தியம் உள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் கண்டி மாவட்டத்திலும் 100 மில்லி மீற்றருக்கும் அதிகரித்த பலத்த மழைவீழ்ச்சி பதிவாகும் சாத்தியம் உள்ளதாக திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன், மேல், சப்ரகமுவ, வடமேல் மாகாணங்களிலும் கண்டி, நுவரெலியா, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் இடைக்கிடையே மழை பெய்யுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊவா மாகாணத்திலும் அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களிலும் மாலை அல்லது இரவு வேளைகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யுமென கூறப்பட்டுள்ளது.

மத்திய மலைநாட்டின் மேற்கு மலைசரிவுகளிலும் வடக்கு, வடமத்திய, வடமேல் மாகாணங்களிலும் திருகோணமலை, அம்பாந்தோட்டை, மொனராகலை மாவட்டங்களிலும் மணிக்கு 40 முதல் 50 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசுமென எதிர்வுகூறப்பட்டுள்ளது.


# இளம் மனைவியுடன், இரு பிள்ளைகளை காணவில்லை எனக் கணவன் முறைப்பாடு

## வவுனியா, கோவில்புதுக்குளத்தில் சம்பவம்









(கே.வசந்தன்)

வவுனியா, கோவில்புதுக்குளம் பகுதியைச் சேர்ந்த இளம் மனைவி ஒருவரையும் அவரது இரு பிள்ளைகளையும் காணவில்லை என கணவர் வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

வவுனியா, கோவில்புதுக்குளம் பகுதியில் வசித்து வந்த குடும்பம் ஒன்றில் 32 வயதான அ.அபிராமி என்னும் பெயருடைய தனது மனைவி, பிள்ளைகளான கம்சனா (வயது 11), சன்சிகன் (வயது 8) ஆகிய இருவரையும் கடந்த வியாழக்கிழமை பாடசாலைக்கு அழைத்து சென்றுள்ளார்.

எனினும், குறித்த இரு மாணவர்களும் பாடசாலைக்கு செல்லவில்லை. மனைவியும் வீடு திரும்பவில்லை. நானும், உறவினர்களும் பல இடங்களிலும் தேடிய நிலையில் அவர்கள் மூவரும் வீடு திரும்பவில்லை என கணவன் தன் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து, மனைவியையும், இரு பிள்ளைகளையும் காணவில்லை என கணவர் வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். இது தொடர்பான தகவல் கிடைத்தோர் 0765273860 என்னும் தொலைபேசி இலக்கத்திற்கோ அல்லது வவுனியா பொலிஸாருக்கோ தெரியப்படுத்துமாறும் கோரப்பட்டுள்ளது.



# தயாசிறி - மைத்திரி திரும்பவும் சங்கமம்?

நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகரவும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மைத்திரி தரப்பும் இணைந்து செயற்படுவதற்கு இணக்கத்துக்கு வந்துள்ளன என்று தெரியவருகின்றது.

தயாசிறி ஜயசேகரவை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியிலிருந்தும் கட்சி உறுப்புரிமையிலிருந்தும் நீக்குவதை இடைநிறுத்தி கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தினால் இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தயாசிறி ஜயசேகரவினால் தாக்கல் செய்யப்பட்ட மனுவை ஆராய்ந்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

தயாசிறிக்கு எதிராக இவ்வாறு நடவடிக்கை எடுத்த கட்சியின் முன்னாள் தலைவர் மைத்திரிபால சிறிசேன நீதிமன்ற முடிவை ஏற்பதாக தெரிவித்துள்ளார்.

அதேபோல தயாசிறி ஜயசேகரவை சுதந்திரக்கட்சியின் செயலாளராக ஏற்பதாக அக்கட்சிக்கு தலைவராக நியமிக்கப்பட்ட – நீதிமன்றத்தால் தற்போது இடைக்கால தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள – விஜயதாஸ ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

எனினும், தயாசிறி ஜயசேகரவை கட்சிலிருந்து இடைநிறுத்தும் முடிவை சுதந்திரக்கட்சியின் நிமால் சிறிபால டி சில்வா தரப்பு எடுத்துள்ளது.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே சுதந்திரக்கட்சியின் அதிகாரத்தைக் கைப்பற்றும் நோக்கில் தயாசிறி, மைத்திரி தரப்புகள் இணையும் இணக்கத்துக்கு வந்துள்ளன எனக் கூறப்படுகின்றது.

# தனது மாமியாரை வெட்டி கொலை செய்த மருமகள்



தனது மாமியாரை, மருமகளொருவர் வெட்டிக் கொலை செய்துள்ள கொடூர சம்பவமொன்று கம்பளை, எக்கால பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உலப்பனை தோட்டத்தில் நேற்று முந்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

வயதான எஸ். சாம்பஜோதி என்பவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார். 32 வயதான மருமகள் கைது செய்யப்பட்டுள்ளார்.

மருமகள், அவரின் இரு பிள்ளைகள் மற்றும் மாமியார் ஆகியோர் ஒரே வீட்டில் வசித்து வந்துள்ளனர். இந்நிலையிலேயே நேற்றிரவு மருமகள், மாமியாரை வெட்டிக் கொலை செய்துள்ளார்.

வெட்டு காயங்களுக்கு இலக்கான மாமியார், கம்பளை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் கம்பளை மற்றும் எக்கால பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றனர்.

# வாழ்வில் தீய செயல்களை விட்டு ஒதுங்கி புதிய வாழ்வுக்கு எம்மைத் தயார்படுத்துவோம்!

## இஸ்லாமிய புத்தாண்டு - ஹிஜ்ரி 1446

துல்ஹஜ் மறைகிறது. முஹர்ரம் பிறக்கிறது. இஸ்லாமிய புத்தாண்டு மலர்கிறது. அல்லாஹ்வின் அருட்கொடையால் நாம் ஹிஜ்ரி 1445 ஐ கடந்து 1446 இல் காலடி வைக்கிறோம்.

நபி (ஸல்), அல்லாஹ்வால் உலகத்துக்கு அனுப்பப்பட்ட உன்னத நோக்கத்தை அடைந்து கொள்வதில் அவர்களுக்கு சாதகமாக அமைந்த ஒரு பாரிய திருப்பு முனையான ஹிஜ்ரத் நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டே இஸ்லாமிய புதிய வருடம் கணிக்கப்படுகிறது. நபி (ஸல்)யும் நபித் தோழர்களும் கி.பி. 622 இல் மக்காவிலிருந்து மதீனாவுக்கு புலம் பெயர்ந்தமை ஹிஜ்ரத் என்று அழைக்கப்படுகிறது.

எப்பொழுது முதல் இஸ்லாமிய வருடம் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதை உமர் (ரழி) தனது ஆட்சிக் காலத்தில் நபித்தோழர்களை அழைத்து ஒன்று சேர்த்து ஆலோசனை கேட்டார்கள். அப்போது பலரும் பல மாதங்களைக் குறிப்பிட்டார்கள். இறுதியில் முஸ்லிம்களின் முதல் மாதமாக முஹர்ரம் மாதத்தையும் வருடம் ஆரம்பிப்பது நபி (ஸல்) மக்காவிலிருந்து மதீனாவுக்கு ஹிஜ்ரத் சென்ற நாள் எனவும் முடிவெடுக்கப்பட்டது.

நபி (ஸல்) ஹிஜ்ரத் ஊடாக இஸ்லாத்துக்கு எதிரான சக்திகளையும் அத்துமீறல்களையும் மிகைத்து தூய இஸ்லாத்தை வாழ்வில் பிரதிபலிக்கச் செய்வதற்கான புதியதொரு வாழ்க்கையை தெரிவு செய்தார்கள். அதற்கான இலட்சியப் பயணமே ஹிஜ்ரத் நிகழ்வாகும்.

இன்று ஒவ்வொரு வருடமும் இஸ்லாமிய புத்தாண்டின் போதும் இதனை நினைவுபடுத்தும் நாம் எம் வாழ்வில் எத்தகைய தீய செயல்களை விட்டு ஒதுங்கி புதிய வாழ்வுக்கு எம்மைத் தயார்படுத்தியிருக்கிறோம்?

வருடத்தின் இறுதிக் கட்டத்தில் இருக்கும் நாம் இந்த வருடத்தில் அமைந்த செயற்பாடுகளை ஒரு கணம் மீள்பரிசீலனை செய்ய வேண்டிய தேவை உண்டு. எத்தனை தடவைகள் அல்குர்ரானை ஓதி முடித்தேன்? பர்ளு தொழுகைகளை உரிய நேரத்துக்கு நிறைவேற்றினேனா? எத்தனை தடவைகள் தஹஜ்ஜத் தொழுகைகளை நிறைவேற்றினேன்? சுன்னத்தான தொழுகைகளை எந்தளவு நிறைவேற்றினேன்? எனது சொத்தில் இருந்து எத்தனை ரூபாய்களை இறை பாதையில் செலவு செய்தேன்? மற்றைய சகோதரர்களுடனும் இரத்த உறவுகளுடனும் உறவுகளைப் பேணி நடந்தேனா?


மொத்தத்தில் இறைவனுக்கும் மனிதனுக்கும் நான் நிறைவேற்ற வேண்டிய கடமைகளை எந்தளவு நிறைவேற்றியுள்ளேன் என எமக்குள் நாம் கேட்டுக் கொள்வதோடு, செய்த பாவங்களுக்கும் தவறுகளுக்கும் அல்லாஹ்விடத்தில் மன்றாடி பாவமன்னிப்பு தேடிக்கொள்ள வேண்டும்.

இஸ்லாமிய ஆண்டு ஹிஜ்ரி 01 கி.பி. 622 இலிருந்து ஆரம்பிக்கிறது. 2024 ஆம் ஆண்டில் இஸ்லாமிய ஆண்டு 1446 தோன்றுகிறது. கிறிஸ்து ஆண்டானது (ஆங்கில, தமிழ், சிங்கள வருடங்கள்) சூரிய சுழற்சியைக் கொண்டு கணிக்கப்படுகிறது. இஸ்லாமிய ஆண்டு ஹிஜ்ரியானது சந்திர சுழற்சி மூலமாக கணிக்கப்படுகிறது. இது இஸ்லாமிய வருடத்தின் தனித்துவத்தை எடுத்துக் காட்டுகிறது.

பசி உணவைத் தேடுவதைப் போல ஈமான் அமல்களைத் தேடும். எனவே ஈமான் உறுதி அடைந்தால் அமல்கள் செய்ய வாய்ப்புக் கிடைக்கும். அமல்கள் செய்தால் ஈருலகிலும் நிம்மதி கிடைக்கும் இந்த வருடத்தை விட அடுத்த வருடம் எனது வாழ்வில் ஈமானிய மலர்கள் மலர்ந்து செழிக்க வேண்டும் என்ற உறுதிப்பாட்டையும் எடுத்துக் கொள்வது அவசியமாகும்.

ஒவ்வொரு வருடமும் எம்மை விட்டு பிரிந்து செல்லும் போது எமது ஆயுள் காலம் குறைவடைந்து மரணம் எம்மை அண்மித்துக் கொண்டிருக்கிறது என்பதை நினைவில் நிறுத்திக் கொள்வோம். பிறக்கவிருக்கும் இஸ்லாமிய புதுவருடம் ஹிஜ்ரி 1446 இல் எமக்கு மத்தியில் காணப்படும் அனைத்து பிளவுகளையும் மனக் கசப்புகளையும் உதறித் தள்ளிவிட்டு சகோதரத்துவத்தை, பரஸ்பர புரிந்துணர்வைத் தோற்றுவிப்பதற்கு அல்லாஹ் அருள் புரிவானாக! ஆமீன்!!

**கலாபூஷணம் பரீட் இக்பால்,**
**யாழ்ப்பாணம்.**



# இன்றைய ராசி பலன்கள் - 08.07.2024

## மேஷம்

இன்று நீங்கள் சுப காரியங்களில் பங்கு கொள்வீர்கள். புதிய நபர்கள் மற்றும் நண்பர்கள் ஏற்படுவார்கள். உங்கள் நண்பர்களின் பட்டியல் விரிவடையும்.

உங்கள் பணியில் நற்பெயர் எடுப் பீர்கள். சக பணியாளர்களும் ஆதரவாக இருப்பார்கள்.

உங்கள் துணையுடனான உறவில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். நல்லுறவை மேம்படுத்த உங்கள் துணையுடன் மனம் திறந்து பேச வேண்டும்.

இன்று பண வரவு அதிகரித்து காணப்படும். இன் றைய தினம் பங்கு வர்த்தகம் லாபம் தரும் மற்றும் சாதகமாக இருக்கும்.

மகிழ்ச்சியான மனநிலை உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும். உங்களை நீங்கள் உற்சாகமாக வைத்துக் கொள்ளுங்கள்.

## ரிஷபம்

உங்கள் குடும்பப் பொறுப்புகள் அதிக மாக காணப்படும். எனவே நேர்மையான முறையில் அவற்றை நிறைவேற்ற வேண்டும்.

பணிகள் அதிகரித்து காணப்படும். பணி நிமித்தமான பயணம் காணப்படும். முக்கியமான பணிகளை முடிக்க இயலாத நிலை காணப்படும்.

உங்கள் துனையுடன் தொடர்பு கொள்ளும்போது கவனம் தேவை. இதனால் உறவில் நல்லிணக்கம் பரா மரிக்கப்படும்.

உங்கள் நிதிநிலைமையைக் கவனமாகக் கையாள வேண்டும். திடீர் செலவுகள் காணப்படும்.

ஆரோக்கியம் சுமாராக இருக்கும். என்றாலும் கால் வலியால் அவதிப்பட நேரலாம்.

## மிதுனம்

உங்கள் இலக்குகளை எளிதில் அடைவீர்கள். உங்கள் அணுகு முறை யில் விட்டுகொடுத்து செல்லும் போக்குக் காணப்படும்.

உங்கள் மேலதிகாரிகள் மற்றும் சக பணியாளர்களுடன் ஒரு விருந்தில் கலந்து கொள்வீர்கள்.

இன்று உறவில் அன்பு நிறைந்து காணப்படும். அன்பான உணர்வுகளை வெளிப்படுத்துவதன் மூலம் இன்று உறவில் பிணைப்பு அதிகரிக்கும்.

இன்று பண வரவு அதிகமாக காணப்படும். பங்கு வர்த்தகம் மூலம் பணம் சம்பாதிக்கும் வாய்ப்பு உள் ளது.

இன்று நீங்கள் ஆரோக்கியத்துடன் காணப்படு வீர்கள்.

## கடகம்

இந்த நாளில் மாபெரும் மாற்றங்கள் ஏற்படலாம். இது உங்களுக்கு கவ லையை அளிக்கும்.

உங்கள் சக பணியாளர்களின் ஆதரவு கிடைக்காது. அவர்களின் மூலம் சில இடையூறுகள் ஏறபடும்.

உங்கள் உறவில் அகந்தை மனப்பான்மை காணப்படும். இத்தகைய உணர்வுகளை தவிர்த்தல் நல்லது.

நிதிநிலை உங்கள் எதிர்பார்ப்பின் படி அமையாது. செலவுகள் அதிகமாக இருக்கும். சேமிப்பை பராமரிக்க இயலாது.

தோள்களில் வலி ஏற்பட வாய்ப்பு உள்ளது. முறையான உடற்பயிற்சி உங்களை ஆரோக்கிய மாக வைத்திருக்கும்.

## சிம்மம்

இன்று வெற்றி பெறுவதற்கு விரைந்து முடிவெடுக்க வேண்டும். உங்கள் பணிகளை எளிதாக செய்து முடிப்பீர்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதற்கு உகந்த நாள்.

பணியில் உங்கள் முயற்சிக்கான நன்மதிப்பை பெறுவீர்கள்.முக்கியமான பணிகளை செய்து முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவை பராமரிப்பீர்கள். இது இருவருக்கும் திருப்தியை அளிக்கும்.

இன்று நிதி வளர்ச்சி சிறப்பாக காணப்படுகின்றது. பணம் அதிகமாக காணப்படும். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

இன்று சிறப்பான ஆரோக்கியத்தை பராமரிப்பீர் கள்.

## கன்னி

நேர்மறை எண்ணங்களை வளர்த் துக் கொள்வது நல்லது. வெளியி டங்களுக்கு சென்று வருவதன் மூலம் அமைதி கிடைக்கும்.

பணியில் வெற்றி பெற மிகுந்த முயற்சி எடுக்க வேண்டும். உங்கள் பணிகளை திட்டமிட்டு முறைப்படி ஆற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் சூடான விவாதங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. உறவில் நல்லிணக்கத்தை பராமரிக்க விஷயங்களை சகஜமாக எடுத்துக் கொள்வது நல்லது.

இன்று வரவும் செலவும் இணைந்து காணப்படும். உங்கள் பணத்தை முறையாக செலவு செய்யும் நிலை காணப்படாது.

சரியான நேரத்தில் உணவு உட்கொள்ளுங்கள். அதிக நீரைப் பருகுங்கள். இது உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.

## துலாம்

இன்று தன்னம்பிக்கையுடன் அமை தியான மன நிலையில் இருப்பீர்கள். உங்களின் முக்கியமான செயல்களை செய்து திருப்தி உணர்வை அடை வீர்கள்.

பணியிடத்தில் அனைத்தும் சிறப்பாக இருக்கும். உங்கள் பணிக்கு மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்களுக்கும் உங்கள் துணைக்கும் இடையே நல்ல பிணைப்பு காணப்படும்.இருவருக்கும் இடையேயான புரிந்துணர்வை மேம்படுத்திக் கொள்ளுங்கள்.

நிதிநிலை சிறப்பாக காணப்படும். உங்கள் சேமிப்பு உயரும்.

இன்று நீங்கள் ஆற்றலுடன் ஆரோக்கியமாக காணப்படுவீர்கள்.

## விருச்சிகம்

எளிதான மற்றும் திட்டமிட்ட அணுகு முறை மூலம் இன்று நீங்கள் வளர்ச்சி அடையலாம். உறுதி மற்றும் தைரியம் உங்களை உச்சத்துக்கு அழைத்துச் செல்லும்.

உங்கள் பணிகளை எளிதாக ஆற்று வீர்கள். பணியிடத்தில் நன்மையும் பாராட்டும் கிடைக் கும்.

நல்ல புரிந்துணர்வை பராமரிக்க நட்பான அணுகுமுறை தேவை. இது இருவருக்கும் இடையேயான உறவின் பிணைப்பை வலுப்படுத்தும்.

இன்று பணவரவு அதிகமாக காணப்படும். உங்கள் சேமிப்பை கூட்ட இயலும்.

நீங்கள் இன்று முழு ஆரோக்கியத்துடன் காணப்படு வீர்கள். இன்றிய நாளை நன்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 08.07.2024




ஆன்மீக ஈடுபாடு பலன் தரும். பிறருடன் பழகி அவர்களை நண்பர்களாக ஆக்கிக் கொள்ளலாம்.

நல்ல பலன்களைக் காண கடுமையாக உழைக்க வேண்டும். நீங்கள் சிறிது பணிகளை இன்று முடிப்பீர்கள். சில பணிகள் நிலுவையில் இருக்கும்.

உணர்ச்சிவசப்படுவதன் மூலம் துனையுடனான உறவில் புரிந்துணர்வு பாதிக்கப்படும். ஆரோக்கியமான உறவிற்கு இத்தகைய உணர்வுகளை தவிர்க்க வேண்டும்.

இன்று அதிக செலவுகள் ஏற்படும். சில கடன்களை அடைக்க நேரும்.

உடல் உழைப்பு காரணமாக தோள்களில் வலி ஏற்படும். தியானம் மூலம் அமைதி பெறலாம்.




இன்று உற்சாகத்துடன் நீங்கள் செய்யும் எந்த ஒரு செயலும் உங்களுக்கு சாதகமாக அமையும். சில ஏமாற்றங்கள் காணப்படும். அவைகள் மூலம் தடை ஏற்பட அனுமதிக்காதீர்கள். உங்கள் செயல்களை தொடர்ந்து செய்யுங்கள்.

உங்கள பணியில் சில போராட்டங்கள் சந்திக்க நேரும். ஆனால் உங்கள் பணிகளை திட்டமிட்டு முறையாக ஆற்றுவதன் மூலம் வெற்றி கிடைக்கும்.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். இருவரும் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்ள வேண்டும்.

இன்று வரவும் செலவும் இணைந்து காணப்படும். நிதிநிலையை கவனமாகக் கையாள வேண்டும்.

இன்று பலகீனமாகவும் சோர்வாகவும் இருப்பீர்கள். தியானம் மேற்கொள்வது நல்லது.




இன்று சில தடைகளை சந்திப்பீர்கள். என்றாலும் திட்டமிட்டு பணியாற்றினால் இந்த நாளை உங்களுக்கு சாதகமாக ஆக்கிக் கொள்ளலாம்.

அதிகரிக்கும் பணிகளை சமாளிக்க நேரும். இதனால் தேவையற்ற தவறுகள் ஏற்படும். பொறுமையுடன் பணிகளைக் கையாள்வது நல்லது.

உங்கள் துணையின் நடத்தை எரிச்சலை ஏற்படுத்தும். அமைதியாக இருந்து அறிவு பூர்வமாகப் பிரச்சினைகளைக் கையாள வேண்டும்.

இன்று நிதிநிலையில் கட்டுப்பாடு காணப்படும். தேவையற்ற செலவுகளை கண்காணியுங்கள்.

செரிமானம் சம்பத்தப்பட்ட பிரச்சினைகள் நேரலாம். வெளியிடங்களில் உணவு உண்பதை தவிர்த்தல் நலம்.




கூடுதல் பொறுப்புகள் காரணமாக பதட்டம் நிறைந்திருக்கும். பாதுகாப்பற்ற உணர்வு கானபப்டும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்ப்பது நல்லது.

பணியிடத்தில் அமைதியான அணுகுமுறையை பராமரிக்க வேண்டும். இன்று பணிகள் அதிகமாக காணப்படும் என்பதால் பணிகளை சிறப்பாக திட்டமிட வேண்டும்.

உங்கள் உணர்வுகளை உங்களின் துணையிடம் வெளிப்படுத்துவது எளிதாக உணர்வீர்கள். எதிர்மறை எண்ணங்களைத் தவிர்த்தல் நல்லது.

இன்று நிதி வளர்ச்சி சுமாராக காணப்படும். செலவுகள் அதிகமாக இருக்கும்.

சளி அல்லது இருமல் பாதிப்புகள் காணப்படும். நேர்மறை எண்ணத்தை பராமரிக்க முயலுங்கள்.

